


அரச பணியாளர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட எம்.பி. ஒருவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துவருகிறது பொலிஸ்.

நீதிமன்றத்திடம் இதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளதாக தகவல். மேற்படி எம்.பி. ஏற்கனவே பல சர்ச்சைகளில் சிக்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 123 குரோதி வருடம், கார்த்திகை மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை (11.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ.ஆகிர் -09, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.40












சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் முல்லைத்தீவு நகர சுற்றுவட்ட வீதியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

**படங்கள்:** *விஜயரத்தினம் சரவணன்*

## ஒருசில மருந்துகளுக்கு தற்காலிக தட்டுப்பாடு

### சுகாதார அமைச்சர் முன்னறிவிப்பு

*நா. தினுஷா*

மருந்து இறக்குமதி செய்வதற்கான ஒதுக்கீடு செயற்பாடுகளுக்கு கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த ஒருசில இடையூறுகள் காரணமாக, எதிர்வரும் நாட்களில் இடைக்கிடை ஓரிரு மருந்துகளுக்கு தற்காலிக தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



அவ்வாறு மருந்து தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அதுதொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக வுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சோடியம் பைகார்ப னேட்டு தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதுடன் அடுத்த ஆறு மாதங்களுக்கு தேவையான சோடியம் பைகார்பனேட்டு நாட்டில் இருப்பில் இருப்பதாகவும் அமைச்சர் அறிவித் தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(10) இடம்பெற்ற...

» 02 பக்கம்

## ஞாயிறன்று அநுர இந்தியாவுக்கு



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை (15) மூன்றுநாள் உத்தி யோகபூர்வ விஜயம் மேற் கொண்டு இந்தியா பயண மாகவுள்ளார்.


இது ஜனாதிபதியின் முதலாவது உத்தியோக பூர்வ இராஜதந்திர பயண மாக அமைவதுடன் இதன்போது இந்திய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் தார்.

» 02 பக்கம்

# சந்திரசேன, உதயங்க மீது அமெரிக்கா தடை விதிப்பு!

### ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகச் சாடி இராஜாங்கத் திணைக்களம் அதிரடி நடவடிக்கை





ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் முன்னாள் பிரதம நிறைவேற்றதிகாரி கபில சந்திரசேன மற்றும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க ஆகிய இரு இலங்கையர்கள் மீது அமெரிக்கா தடைகளை யும் விசா கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது.

» 02 பக்கம்

## மின் கட்டணம் உயர்வின்றி 06 மாதங்களுக்கு நீடிப்பு



» 02பக்கம்

## ரணில் அரசின் அமைச்சரவையால் ரூ.07 பில். நட்டம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த மதுபான நிறுவனங்களிட மிருந்து இதுவரையில் அரசுக்கு கிடைக்கவேண்டிய வரிப்பணத்தில் 07 பில்லியன் ரூபா நிலுவையில் இருப்பதாக அரசாங்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

நிலுவை வரிப்பணத்துக்கு பதிலாக அவர்களின் சொத்துக்களை அரசுடை மையாக்குவதற்கு ஏதேனும் சட்ட ஏற்பாடுகள் இருக்குமாக இருந்தால் அதனை செய்யவும் அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(10) இடம்பெற்ற அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் வாராந்த செய்தி யாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

» 02 பக்கம்

## அரிசிக்கான நிர்ணய விலை வர்த்தமானியில் வெளியீடு



### கட்டுப்பாட்டை மீறுவோரை தேடி சுற்றிவளைப்புகள் ஆரம்பம்

*கே.சுபானி*

இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு அரிசிக்கான அதிகபட்ச நிர்ணய விலைகள் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நுகர்வோர் அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

## அமைச்சர் லால்காந்தவை உடனடியாக கைதுசெய்க

### சுற்றாடல் ஆய்வாளர் அஜந்தா சி.ஐ.டியில் முறைப்பாடு



» 02பக்கம்

## கமெண்ட் கந்தர்...



அமெரிக்காக்காரனே திருடர்களை பிடிக்கிறான்.. இங்கே ஆட்சியாளர்கள் தான் இன்னமும் தடுமாறிக்கொண்டிருக்கிறாங்க...

## வாகன இறக்குமதிக்கு கோட்டா முறை: அரசாங்கத்துக்கு புதிய யோசனை



*நா. தினுஷா*

வாகன இறக்குமதியாளர்கள் கடந்த காலங்களில் வாகனம் இறக்குமதி செய்துள்ள புள்ளி விபரங்களின் அடிப்ப டையில் வாகனங்களை இறக்குமதி செய்ய அவர்களுக்கு கோட்டாக்களை பெற்றுக்கொடுக்குமாறு வாகன இறக்கு மதியாளர்கள் அரசாங்கத்துக்கு யோசனை முன்வைத்துள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வாகன இறக்குமதிகள் இடம் பெறா மையின் காரணமாக, இதனூடாக மீண்டும் வாகன இறக்குமதி செய்வது பொருத்தமானதாக இருக்குமென்றும் ஏழு வருடங்கள் பழமையான

...» 02 பக்கம்




# புத்தகங்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும்

## புதிய அரசாங்கத்திடம் இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை

இலங்கையின் புத்தகத்துறையானது, புத்தகங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை புதிதாக மீண்டும் முன்வைக்கவுள்ளது. இதற்கிணங்க, அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக நான்கு தொழிற்றுறை அமைப்புகள் புதிய அரசாங்கத்துக்கு இந்த முன்மொழிவை சமர்ப்பிக்கவுள்ளன.

அறிவு மற்றும் கற்றல் ஆதாரங்களுக்கு வரி விதிப்பதால் ஏற்படும் நிதியியல் மற்றும் சமூக மாற்றங்களை கருத்தில் கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி, நூல் வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த சங்கங்கள், 2024 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னதாக வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களின் பட்டியலில் புத்தகங்களை மீளச் சேர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

நான்கு சங்கங்களும் தமது பிரேரணையில், உள்நாட்டு தொழிலாளர்களைத் தவிர, பதிப்பகத் துறைக்கான அனைத்து உள்ளீடுகளும் இறக்குமதி செய்யப்படுவதால், இலங்கையின் புத்தகத் துறைக்கு ஏற்கனவே 33.045வீத வரி விதிக்கப் பட்டுள்ளது. மேலும் பெறுமதிசேர் வரி (VAT) விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக விற்பனைப் புள்ளியில் 18வீத நூல்களை பலர் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் சிறிய அளவிலான பதிப்பகங்கள் வர்த்தகத்தில் இருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டின்போது கருத்துத் தெரிவித்த இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் (SLBPA) தலைவர் சமந்த இந்தீவர,

''பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது புதிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் புத்தகங்களுக்கு பெறுமதிசேர் வரி விதிக்கப் பட்டதை விமர்சித்ததையும் அன்றைய அரசாங்கம் மாற்றியமைத்ததையும் சுட்டிக்காட்டினார். எனவே, புத்தகத்துறை தொடர்பான பிரச்சினைகள் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்'' என்றார்.

''புத்தகங்கள் மீது பெறுமதிசேர் வரி (VAT) விதிக்கப்படுவதால் நேரடியாகக் கூறப்படும் தொழிற்றுறையைப் பாதிக்கும் ஏராளமான முரண்பாடுகளை நாங்கள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். மற்றொரு விசனத்துக்குரிய விடயம் என்ன வென்றால், புத்தகங்களுக்கு வரி விதிப்பதன் மூலம், 1950ஆம் ஆண்டின் யுனெஸ்கோ புளோரன்ஸ் உடன்படிக்கையை இலங்கை தொடர்ந்து மீறி வருகிறது. யுனெஸ்கோ புளோரன்ஸ் ஒப்பந்தம் என்பது, இறக்குமதி செய்யப்படும் சில கல்வி, அறிவியல் மற்றும் கலாசாரப் பொருட்களுக்கு சுங்க வரிகள் மற்றும் வரிகளை விதிக்கக்கூடாது என்று ஒப்பந்தம் செய்துள்ள மாநிலங்களை பிணைக்கும் ஒரு ஒப்பந்தமாகும்" என்று (SLBPA) பொதுச் செயலாளர் தினேஷ் குலதுங்க மேலும் கூறினார்.

இலங்கை எழுத்தாளர் சங்கம், அகில இலங்கை புத்தக விற்பனையாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை புத்தக இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியன அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளன.



### புதிய ஜனநாயக முன்னணியின்
# தேசியப் பட்டியலுக்கு பைசர் நியமனம்



புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு பைசர் முஸ்தபாவின் பெயரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அந்தக் கட்சி பரிந்துரை செய்துள்ளது.

2024 பொதுத் தேர்தல் முடிவுகளுக்கமைய சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணிக்கு இரு தேசியப் பட்டியல்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

அவற்றில் ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு இதற்கு முன்னர் ரவி கருணாநாயக்கவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்பன போட்டியிட்டிருந்தன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யுமாறு புதிய ஜனநாயக முன்னணிக்கு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தபோதிலும் தற்போது பைசர் முஸ்தபாவை நியமிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## வாகன இறக்குமதிக்கு...

ஜப்பான் வாகனங்களை இறக்குமதி செய்யுமாறு அரசாங்கத்துக்கு யோசனை முன்வைத்திருக் கிறார்கள்.

வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலத்துங்க இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஏழு வருடங்கள் பழமையான ஜப்பான் வாகனங்களை இறக்குமதி செய்யுமாறு அரசாங்கத்துக்கு யோசனை முன்வைத்திருக்கிறோம். ஜப்பான் போன்ற நாடுகளில் ஒருவருடத்தில் ஒருவாகனம் இறக்குமதி செய்வதற்கு செலவழிக்கும் பணத்தில் நான்கு வாகனங்களை கொள்வனவு செய்ய முடியும். அதன்போது எம்மால் செலவுகளை பாரியளவில் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும்.

அவ்வாறு நான்கு வாகனங்களை கொள்வனவு செய்யும்போது வரியை குறைக்க வேண்டிய தில்லை. ஒருவருடத்துக்கு ஒரு வாகனத்தை இறக்குமதி செய்யும்போது அறவிடும் வரியை அவ்வாறே அறவிட வேண்டும். இவ்வாறென்றால், இதுபோன்ற நான்கு வாகனங்களுக்கான வரியை தனித்தனியாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே, சாதாரண விலையில் கார்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பையும் மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கலாம்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வாகன இறக்குமதியாளர்களால் வாகனங்களை இறக்குமதி செய்யமுடியாமல் போயுள்ளது. அதன் காரணமாக கடந்த காலங்களில் வாகன இறக்குமதியாளர்களால் வாகன இறக்குமதி செய்துள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அவர்களுக்கு கோட்டாக்களை பெற்றுக்கொடுக்குமாறு தெரிவித்தார்.

## அமைச்சர் லால்காந்தவை...

''விலங்குகளை வேட்டையாடும் செயற்பாடுகளை தூண்டும் வகையில் பாராளுமன்றத்தில் கருத்து முன்வைத்தமைக்காக சுற்றாடல் சட்டத் திட்டங்களுக்கமைய கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்தவை உடனடியாக கைதுசெய்து அவர் ஏன் இவ்வாறான அறிவிப்பை விடுத்தார் என்பது தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டும்'' என்று சுற்றாடல் ஆய்வாளர் கலாநிதி அஜந்தா பெரேரா தெரிவித்தார்.

லால்காந்தவின் கருத்து தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை(10) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்ததன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''லால்காந்த பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையைத் தொடர்ந்து, சுற்றாடல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் பாராளுமன்ற சுற்றுவட்டாரத்தில் வைத்து விலங்குகளை கொலை செய்வது சட்டவிரோதமான செயற்பாடு என்று அறிவித்திருந்தேன். வனவிலங்குச் சட்டம், சுற்றாடல் சட்டத்திட்டங்களுக்கமைய ஒருபோதும் விலங்குகளை கொலை செய்ய முடியாது.

இருந்தபோதும், இந்த அறிவிப்பை வெளியிட்டதன் பின்னர் லால்காந்த விலங்குகளை சித்திரவதைக்குட்படுத்துவதாக எங்களுக்கு அறியக் கிடைத்தது. எனக்கு அறிமுகமில்லாத தொலைபேசி இலக்கத்தினூடாக எனக்கு அழைப்பு விடுத்து மிகவும் இழிவாக என்னைத் திட்டினார்கள். ஒரு பெண் என்று கூட மதிக்காமல் உயிர் அச்சுறுத்தல் விடுத்து நிந்திப்பதற்கான உரிமை எவருக்கும் இல்லை. இருந்தபோதும் லால்காந்தவின் கருத்து முற்றிலும் தவறானது என்றதன் அடிப்படையிலேயே குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அவரின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. எங்களை உயிர் அச்சுறுத்தல் விடுத்து, இழிவான வார்த்தைகளால் எங்களை நிறுத்த முடியாது. நாங்கள் குழந்தைகளும் இல்லை. சுற்றாடல் சட்டத்திட்டங்களுக்கமைய, லால்காந்த பாராளுமன்றத்தில் முன்வைத்த கருத்து, வேட்டையாடும் செயற்பாடுகளுக்கு தூண்டுதலை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடாகும். எனவே, விலங்குகளை வேட்டையாடும் செயற்பாடுகளை தூண்டியமைக்காக சுற்றாடல் சட்டத்திட்டங்களுக்கமைய லால் காந்தவை உடனடியாக சிறைப்பிடித்து அவர் ஏன் இவ்வாறான அறிவிப்பை விடுத்தார் என்பது தொடர்பில் வாக்குமூலம் பெற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

## ஒருசில மருந்துகளுக்கு...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகியிருந்தன. கடந்த வருடத்தில் தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய வர்த்தகர்களுக்கு இடையில் முன்னெடுக்கப்படவேண்டிய கொள்முதல் செயற்பாடுகளில் குறைபாடு இருந்தது. அதில் கால தாமதமும் ஏற்பட்டிருந்தது. இந்த வருடம் நிறைவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் கூட இந்த கொள் முதல் செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க வேண்டும்.

இந்நிலையில், கடந்த அமைச்சரவையில் 350 வகையான மருந்துகளுக்காக 50 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்காக அமைச்சரவை அனுமதியும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திரும்பப்பெறும் உத்தரவாதத்தின் அடிப்படையிலும் அரச ஔடத உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன் இருக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் மருந்து உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சினால் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஒழுங்கின்மையின் காரணமாக மருந்து இறக்குமதி செய்வதற்கான ஒதுக்கீடு செயற்பாடுகளுக்கும் ஒருசில இடையூறுகள் ஏற்பட்டிருந்தன. அதே போன்று, இதிலொரு அங்கமாக தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் மருந்துகள் தொடர்பான நிறுவனங்களை பதிவு செய்வதில் பாரதூரமான சிக்கல்கள் இருந்தன. அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அவ்வாறே எதிர்வரும் நாட்களில் இடைக்கிடை ஓரிரு மருந்துகளுக்கு தற்காலிக தட்டுப்பாடு ஏற்படக்கூடும். அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் அதுதொடர்பில விரைந்து நடவடிக்கை எடுப்போம்.

கடந்த சில மாதங்களில் சோடியம் பைகார்பனேட்டுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. சோடியம் பைகார்பனேட் தட்டுப்பாட்டினால் மாவனெல்லை வைத்தியசாலையில் மரணமொன்றும் சம்பவித்திருந்ததாக கூறப்பட்டிருந்தது. அது பொய்யான கருத்தாகும். அவ்வாறானதொரு சம்பவம் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. சோடியம் பைகார்பனேட்டு பிரச்சினைக்குத் தீர்வை கண்டுள்ளோம். எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு தேவையான சோடியம் பைகார்பனேட்டு நாட்டில் இருப்பில் இருக்கிறது. விநியோகஸ்தருக்கு வழங்கப்பட்டிருந்த விலைமனு கோரலுக்கமைய அவரினால் போதிய தொகையில், சரியான நேரத்தில் இன்சுலின் விநியோகிக்காமையின் காரணமாகவே இன்சுலினுக்கு தட்டுப்பாடு இருந்தது.

தேசிய வைத்தியசாலையிலேயே இந்த சிக்கல் இருக்கிறது. அதற்கும் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதும், 500 - 600 வரையான மருந்துகளுக்கான தட்டுப்பாடோ அல்லது தரம் குறைவான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் வழங்கப்படுவதாக வெளியாகும் செய்திகள் முழுமையாக போலியானவையாகும்.

இதேவேளை, அரிசித் தட்டுப்பாடு தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு கையிருப்பில் இருக்கும் அரிசி தொகையை சந்தைக்கு விநியோகிக்குமாறு பாரியளவான அரிசி ஆலை உரிமையாளர்களிடம் கோரிக்கை முன்வைத்திருந்தோம். ஆனால், அந்த செயற்பாடுகள் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கமையவே, ஒருசில நடவடிக்கைகளை முன்னெடுக்க நேர்ந்திருந்தது. மிக விரைவில் அரிசி இறக்குமதி செய்யப்படும். விளைச்சலினால் கிடைக்கப்பெறும் அரிசியும் சந்தைக்கு கிடைக்கும் என்பதால் ஒருதொகை அரிசியை அரசாங்கத்தின் இருப்பில் வைத்துகொண்டு மிகுதியை சந்தைக்கு விநியோகிக்கத் தீர்மானித்திருந்தோம். எதிர்வரும் நாட்களில் தனியார் துறையினரையும் இணைத்துக்கொண்டு அரிசி விநியோக செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடியதாக இருக்குமென்று நம்புகிறோம். அரசின் இருப்பில் ஒருதொகை அரிசியை வைத்துக்கொள்ளவும் சரியான தரவுத் தளத்தை பேணவும் உற்பத்தி முதல் விற்பனை வரையிலான செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம்'' என்றார்.

## மின் கட்டணம்...

மின் உற்பத்திக்காக கடந்த ஆறு மாதங்களில் இடம்பெற்ற உற்பத்தி செலவின் அடிப்படையில் எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு மின் கட்டண அதிகரிப்பு எதுவுமின்றி தற்போதுள்ள மின் கட்டணத்தை அவ்வாறே பேணுவதற்கு மின்சார சபை தீர்மானித்துள்ளது. அதற்கமைய, எதிர்வரும் ஆறு மாதங்களின் பின்னரே மின் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளவும் மின்சார சபை தீர்மானித்திருக்கிறது. எனவே, ஆறு மாதங்களின் பின்னர் மின் கட்டணத் திருத்தம் இடம்பெறும் என்பதால் அதன்போது மக்களுக்கு சாதகமான முறையில் மின்கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளும் வகையில் மின்சார சபையை அரசாங்கம் வழிநடத்தும் என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை(10) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''மின்சார சபை பணியாளர்களுக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. மக்களிடமிருந்து அறவிடப்பட்ட நிதியின் மொத்த தொகையில் பாரிய பங்கு செலவு செய்யப்பட்டிருந்தது. எனவே, எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு மின் கட்டணத்தை அதிகரிக்காமல் செயற்பாடுகளை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிலைமையிலேயே மின்சார சபை இருக்கிறது. அதன் பின்னர் கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே மின் கட்டணத்தை மறுசீரமைப்பு செய்து மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுப்போம்.

ஆறு மாதங்களுக்கு மின் கட்டணத்தை அதிகரிக்காமல் தற்போதுள்ள கட்டண முறையிலேயே முன்னெடுத்துச் செல்வோம். அதன் அடிப்படையிலேயே மேலதிக கொடுப்பனவையும் பெற்றுக்கொடுக்காமல் இருப்பதற்கு மின்சார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருக்கிறது. 33 சதவீதத்தால் மின் கட்டணத்தை குறைப்போம் என்று நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். அந்த நிலைப்பாட்டிலேயே இன்னும் இருக்கிறோம். கடந்த காலங்களில் மக்களிடம் அறவிடப்பட்ட கட்டணங்களின் அடிப்படையிலேயே அவ்வாறு கூறியிருந்தேன். இருந்தபோதும், கடந்த ஆறு மாதங்களில் இடம்பெற்ற உற்பத்தி செலவுகளின் அடிப்படையிலேயே இந்த கணிப்புகளை முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளது.

இதற்கு முன்னர் அறவிடப்பட்ட கட்டணத்தில் ஓரளவு தொகை கடன் வழங்கியவர்களுக்கு பெற்றுக்கொடுக்க மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இருந்தபோதும், எதிர்வரும் ஆறு மாதங்களில் மக்களுக்கு சாதகமான முறையில் மின்கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளும் வகையில் மின்சார சபையை வழிநடத்துவோம்'' என்று சுட்டிக்காட்டினார்.

## அரிசிக்கான நிர்ணய...

அதற்கமைய, அரசாங்கம் அறிவித்துள்ள நிர்ணய விலையை விட அதிக விலையில் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் சுற்றிவளைப்புகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளதாகவும் இந்த நடவடிக்கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை(10) முதல் ஆரம்பமாகியுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், நுகர்வோர் அதிகார சபையால் நேற்று செவ்வாய்க்கிழமை(10) வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, இறக் குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பச்சை அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாகவும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ நாட்டரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோ உள்நாட்டு பச்சை மற்றும் சிவப்பு பச்சை அரிசி அதிகபட்ச மொத்த விலை 215 ரூபாவாகவும் அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு நாடு (வேகவைத்து/அவித்து பெறப்பட்ட - மொட்டை கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி தவிர்த்து) அரிசியின் மொத்த விலை 225 ரூபாவாகவும் அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு சம்பா (பச்சை மற்றும் வேகவைத்து / அவித்து பெறப்பட்ட - சீரக சம்பா தவிர்த்து) அரிசியின் மொத்த விலை 235 ரூபாவாகவும் அதிகபட்ச சில்லறை விலை 240 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஒரு கிலோ உள்நாட்டு கீரிசம்பா (பச்சை மற்றும் வேகவைத்து / அவித்து பெறப்பட்ட) அரிசியின் மொத்த விலை 255 ரூபாவாகவும் அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரசாங்கத்தால் நிர்ணயிக் கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித் துள்ளது.

இதுகுறித்து அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவிக்கையில்,

''அரிசிக்கான அதிகபட்ச நிர்ணய விலையை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் (09) வெளியிடப்பட்டது. இதன்படி இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. புதிய அரிசி விலை அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியில், அதற்கு மேல் அரிசி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வர்த்தக சமூகம், உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் அதேபோன்று நுகர்வோர் எங்களால் அறிவிக்கப்பட்டுள்ள விலைக்கேற்ப அரிசியை கொள்வனவு செய்யுங்கள். முறைகேடாக அல்லது அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுமானால் அதுதொடர்பில் நுகர்வோர் அதிகாரசபையின் 1977 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்வதனூடாக முறைப்பாடு செய்யலாம். அதேபோன்று நுகர்வோர் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யலாம்'' என அவர் தெரிவித்துள்ளார்.

## சந்திரசேன, உதயங்க மீது...

இந்த நடவடிக்கைகள் ஊழல் குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைக்கும் அமெரிக்க முயற்சிகளின் ஒரு பகுதியாகும். இதன்கீழ், ஸ்ரீலங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம நிறைவேற்றதிகாரி கபில சந்திரசேன, எயார்பஸ் விமானங்களை சந்தை பெறுமதியை விட அதிக விலைக்கு கொள்வனவு செய்வதற்கு இலஞ்சம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானங்களை கொள்வனவு செய்யும் ஊழல் திட்டத்தை நடைமுறைப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் 7031(c) சரத்தின் கீழ், இவர்கள் இருவரின் பெயர்கள் மற்றும் இரு தரப்பினரதும் குடும்ப உறுப்பினர்களது பெயர்களும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு நாட்டுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## ரணில் அரசின்...

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஒரு வருடத்தில் 250 - 300 வரையான மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கி, அதனூடாக கிடைக்கப்பெறும் வருமானத்தினூடாக பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய திட்டமிட்டிருந்ததாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். இந்நிலையில், மக்களின் வரிப்பணத்தினூடாக கிடைக்கும் ஓய்வூதிய வாழ்க்கையை முன்னெடுக்கும் நபரொருவர் இவ்வாறு பயபக்தியுடனான கருத்துகளை முன்வைப்பது பொருத்தமானதாக இருக்காது.

மதுபானசாலைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதில் சிக்கல் இல்லை. அவ்வாறு அனுமதிப்பத்திரங்களை வழங்கி அந்த மதுபானசாலைகளில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு மக்கள் செலுத்தும் வரிப்பணத்தை அறவிடுவதற்கு ரணில் உள்ளிட்டோர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவர்களுக்கு நெருங்கிய நண்பர்கள், அலோசியஸ் உள்ளிட்ட குழுக்கள் மக்கள் செலுத்திய வரியை மதுவரித் திணைக்களத்தினூடாக திறைசேரிக்கு முறையாக பெற்றுக்கொடுக்கவில்லை.

அலோசியஸுக்கு சொந்தமான நிறுவனங்களின் நிலுவை வரி 2022ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி தீர்மானம் எடுத்தபோது தமக்கு நெருங்கிய நண்பர்கள் செலுத்தாமலிருந்த வரிப்பணத்தையும் சேகரிப்பதற்கும் தீர்மானம் எடுத்திருக்கலாம். அதேபோன்று, அவரின் அமைச்சரவையில் இருந்தவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்த மதுபான நிறுவனங்களிடமிருந்து கிடைக்கவேண்டிய வரிப்பணம் மாத்திரம் 07 பில்லியன் ரூபா வரையில் நிலுவையில் இருக்கிறது. எனவே, அந்த நிலுவை வரிப்பணத்தை வசூலிக்கவே முயற்சிக்கிறோம். தற்போது வரையில் அலோசியஸுக்கு சொந்தமான மூன்று நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. நிலுவை வரிப்பணத்துக்கு பதிலாக அவர்களின் சொத்துகளை அரசுடைமை யாக்குவதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் சட்டத்தில் இருக்குமாக இருந்தால் அதனை செய்யவும் தயாராக இருக்கிறோம். ஆனால், சட்டத்தில் அதற்கான அனுமதி இல்லை. அதேபோன்று இரு நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் மூன்று நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே, ரணில் விக்கிரமசிங்க மதுபானசாலை உருவாக்குவதற்கு எடுத்த காலத்தில் தென்னை மரங்களை உருவாக்கியிருந்தால், மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான அக்கறையை நெற்களஞ்சியங்களுக்கு வழங்கியிருந்தால் இன்று இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது'' என்று சுட்டிக்காட்டினார்.

## ஞாயிறன்று அநுர...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(10) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஜனாதிபதியின் இந்திய விஜயம் எதிர்வரும் 15 - 17ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இடம் பெறும். இந்த விஜயத்தின்போது இந்திய ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரச மட்டத்திலான உயர் அதிகாரிகளை சந்திப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியப் பெரும ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக குறிப்பிட்டார்.

# சபாநாயகர் அசோக ரன்வலவைச் சந்தித்தார் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர்



ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலத் நசீர் அல்மேரி (Khaled Nasser AlAmeri) சபாநாயகர் (கலாநிதி) அசோக ரன்வலவை நேற்று முன்தினம் (09) மரியாதையின் நிமித்தம் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீரவும் கலந்துகொண்டார்.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உலக அரசாங்கங்களின் மாநாட்டில் உரையாற்றுமாறு இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி அழைப்பு விடுக்கவிருப்பதாகவும் இலங்கைக்கான தூதுவர் சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினார். 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலக அரசாங்கங்களின் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியிருந்ததாகவும் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் குறித்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி உரையாற்றுவதை தாம் விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க சேவையை ஒன்லைன் முறைக்கு மாற்றுவதே ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கு சிறந்த முறைமையென்றும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இது விடயத்தில் இலங்கையுடன் தமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்ள ஐக்கிய அரபு இராச்சியம் தயாராக இருப்பதாகவும் அந்நாட்டுத் தூதுவர் சுட்டிக்காட்டினார். மேலும், வெளிப்படையான மற்றும் ஈர்க்கக்கூடிய முதலீட்டு நடைமுறையை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்தும் இச்சந்திப்பில் கவனஞ்செலுத்தப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் வசிக்கும் இலங்கையர்கள் தொழில் துறை சார்ந்தவர்களாகவும் அமைதியான சமூகத்தினராகவும் வாழ்வது தொடர்பில் நன்மதிப்பைக் கொண்டிருப்பதாகவும் அந்நாட்டுத் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறைகளை முன்னேற்றவேண்டியதன் அவசியம் குறித்தும் இரு தரப்புகளுக்குமிடையில் கலந்துரையாடப்பட்டது. முதலீடுகளை விஸ்தரிப்பது குறித்தும் இங்கு கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கை – ஐக்கிய அரபு இராச்சிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீளவும் ஸ்தாபித்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளைப் பலப்படுத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

# அத்துமீறும் இந்திய மீனவர் பிரச்சினைக்கு பாரதப் பிரதமருடன் பேசி முற்றுப்புள்ளி வையுங்கள்

## சம்மேளனத் தலைவர் மரியதாஸ் கோரிக்கை



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர்கள் தொடர்பில் இந்தியாவுக்குச் செல்லும் எமது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியப் பிரதமருடன் பேசி முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப் பிள்ளை மரியதாஸ் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சமாசத்தில் நேற்று (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளினால் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

நாம் பலமுறை இந்தியத் தூதரகம், இலங்கை அரசாங்கம் ஆகியவற்றுக்கு கோரிக்கை விடுத்தும் இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகள் தொடர்ச்சியாக நமது கடற்பரப்புக்குள் நுழைந்து எமது வாழ்வாதாரங்களை அழித்து வருகின்றன.

இந்நிலையில், இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முதல் பயணமாக எதிர்வரும் வாரம் இந்தியா செல்லவுள்ளதாக அறிகிறோம்.

இந்திய இழுவைமடி படகுகளினால் எமது மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிப்புக்குள்ளாகி வருவதை இலங்கை ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் நன்கு அறிவார்கள்.

மேலும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் யாழ். மாவட்ட மீனவர்களுக்கு வழங்குவதற்காக வலைகள் எடுத்துவரப்பட்ட நிலையில், மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

குறித்த விடயம் தொடர்பில் புதிய கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனுக்கு தெரிவித்த நிலையிலும் இதுவரை மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் உரிய கவனமெடுத்து தேங்கிக் கிடக்கும் வலைகளை மீனவர்களுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே, எமது மீனவர்களின் நீண்டகாலப் பிரச்சினையான இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய பிரச்சினை குறித்து இந்திய பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் பேசி எமது ஜனாதிபதி அநுர தீர்த்துவைப்பார் என நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதார – ஊடக அமைச்சுகளின் செயலாளராக அனில் ஜாசிங்க



சுகாதார மற்றும் ஊடக அமைச்சுகளின் புதிய செயலாளராக விஷேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

அதற்கமைவான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாரநாயக்கவினால் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவுக்கு நேற்று (10) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

# சிவனொளிபாதமலை யாத்திரை செல்வோருக்கு பிளாஸ்ரிக் தடை

## மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை அறிவிப்பு

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் செல்லும்போது பிளாஸ்ரிக் பொருட்கள் உட்பட குப்பைகளை அப்பகுதியில் போடவேண்டாமென்று மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை நேற்று (10) வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிவனொளிபாதமலை யாத்திரைக்கு செல்லும்போது ஏதேனும் குப்பை சேருமெனில், அந்தக் குப்பைகளை தங்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லுமாறு அல்லது சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் செல்லும் முக்கிய நுழைவாயில்களில் (அதாவது நல்லதண்ணி பாதை மற்றும் இரத்தினபுரி வழியாக வரும் இரண்டு பாதைகளில்) உள்ளூராட்சி அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் சிவனொளிபாதமலை யாத்திரை காலத்தில் நடத்தும் குப்பை சேகரிப்பு மையங்களில் ஒப்படைக்குமாறு அனைத்து பக்தர்களிடமும் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** புதிய தொழில் முயற்சிகளால் அதிக இலாபங்களை அடைவீர்கள். எதிர்பாராத தன அதிர்ஷ்டங்கள் உண்டு.

**ரிஷபம்** தடைப்பட்டிருந்த பயணங்கள் இன்று நல்லபடியாகக் கைகொடுக்கும். தொழில் வகையில் அதிக பாராட்டுகளைப் பெறும் நாள்.

**மிதுனம்** திட்டமிட்டு எதையும் இன்று ஆரம்பிக்காதீர்கள். கோபத்தால் புத்தி தடுமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

**கடகம்** கூட்டுறவால் நன்மைகளும் இலாபங்களும் உண்டு. என்றாலும் மாலையில் அதிக மனச் சங்கடங்களுடன் காணப்படுவீர்கள்.

**சிம்மம்** ஏதாவது உடல் நோயால் தொந்தரவுகள் ஏற்படலாம். அல்லது மறைமுக எதிரிகளின் தொல்லைகளுக்கு ஆளாவீர்கள்.

**கன்னி** திடீர் அதிர்ஷ்டம் மற்றும் போட்டி இலாபங்களால் மன நிறைவு கொள்வீர்கள். பிள்ளைகளின் தேவைக்காக கடன் வாங்குவீர்கள்.

**துலாம்** உறவினர், நண்பர்களின் பூரண ஆதரவோடு காரியங்களைச் சாதிப்பீர்கள். வீட்டுக்கான செலவுகள் உண்டு

**விருச்சிகம்** குடும்பத்தின் மகிழ்ச்சியே முக்கியம் எனக் கருதி அதற்கான திட்டங்களைத் தீட்டுவீர்கள். தைரியமாக செயற்படுவீர்கள்.

**தனுசு** காலையில் இருந்த குழப்ப நிலை மாலையில் இருக்காது. எப்படியாவது இன்று உங்கள் காரியங்களைச் சாதித்துவிடுவீர்கள்.

**மகரம்** உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டால் வெற்றி நிச்சயம் உண்டு. காரியத்தடைகளை எப்படியாவது சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்** நண்பர்களின் சந்திப்பால் அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். சுப காரிய நிமித்தம் சிற்சில செலவுகளைச் செய்யவேண்டிய கட்டாயம்.

**மீனம்** தொழில்,வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்திருந்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பாராத பயணங்களால் விரயங்கள் உண்டு.

**திதி** : ஏகாதசி பி.இ.1.09 வரை பின் துவாதசி

**நட்சத்திரம்** : ரேவதி மு.ப.11.48 வரை பின் அஸ்வினி

**பிறை** : வளர்பிறை

**யோகம்** : மரண யோகம் முழுவதும்

**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.

**நல்ல நேரம்** : காலை 6.12 – 7.42 மணி வரை. காலை 9.12 – 10.12 மணி வரை. பகல் 1.42 – 3.12 மணி வரை. மாலை 4.12 – 5.12 மணி வரை

**ராகு காலம்** : 12.12 – 1.42 மணி வரை

**எமகண்டம்** : 7.42 – 9.12 மணி வரை

**குளிகை** : 10.12 – 12.12 மணி வரை

**சந்திராஷ்டமம்** : சிங்க-கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (முற்பகல் 11.48 வரை சிங்க ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 11.48 மணி வரை**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**இன்று முற்பகல் 11.48 மணிக்கு மேல்**
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**விஷேட தினம்** : ஏகாதசி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739


# பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2024 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி**
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08





தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 11ஆம் திகதி, புதன்கிழமை

# டலஸ் சொல்வதிலும் நியாயம் இருக்கிறதே!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இரத்துச் செய்ததால் 72 கோடி ரூபாவுக்கும் அதிக அரச பணம் வீண் விரயமாகியுள்ளதாக சுதந்திர மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

22 மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை முன்வைத்து விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தற்போதைய அமைச்சரவை எடுத்த தீர்மானத்துக்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் ஆசீர்வாதம் கிடைக்குமென அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது .

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் வங்குரோத்து நிலைமையை மூடிமறைக்கும் நோக்கில் 2023 ஜனவரி மாத இறுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இரத்துச்செய்யும் வகையில் தான்தோன்றித்தனமாக எடுத்த தீர்மானத்தால் 72 கோடி ரூபாவுக்கும் அதிக அரச பணம் வீண்விரயமாகியதாகக் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பணம் ஆட்சியாளர்களின் தனிப்பட்ட பணமில்லையெனவும் மாறாக, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வரிப்பணமெனவும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தின் பிரதிகள் எதிர்க்கட்சித் தலைவர், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்த தேர்தல் ஆணைக்குழுவையும் ஆணையாளர்களையும் தூற்றி தேர்தலை நடத்துமாறு உத்தரவிட்ட உயர்நீதிமன்றம் மற்றும் நீதியரசர்களை அவமானத்துக்குட்படுத்தி செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தாம் அரசியல் முதிர்ச்சியற்றவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாக டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கிக் கொள்ளை, சீனி வரி மோசடி, விசா மோசடி போன்ற அரசியல் குற்றங்களின் பட்டியலில் குறித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கொள்ளையையும் உள்ளடக்க வேண்டுமெனவும் அரசியலமைப்பின் மூலம் பெறப்பட்ட அரசியல் சலுகைகளை ஆராயாமல் உரிய பிரதிவாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டுமெனவும் டலஸ் அழகப்பெரும தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டிருக்கும் விடயங்கள் மிகவும் கவனத்திற்கொள்ளப்படவேண்டியவை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.முன்னாள் ஜனாதிபதி ரணில் தனது ஆட்சியின்போது அரசியலமைப்பு பேரவையை கிஞ்சித்தும் கணக்கிலெடுக்காமல் தீர்மானங்களை எடுத்தார். பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை அவர் நியமித்தமை நினைவிருக்கலாம். அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்தை எகிறித்தள்ளிவிட்டு தான் நினைத்ததைச் செய்தார் ரணில். அதுமட்டுமல்லாமல், அரச அதிகாரிகளை கிள்ளுக்கீரையாக நினைத்து சில தீர்மானங்களும் அவரது ஆட்சியில் எடுக்கப்பட்டன.

நுவரெலியா தபால் கந்தோரை தனியார்மயப்படுத்தும் கலந்துரையாடலொன்றில் முன்னாள் ஜனாதிபதி சர்வாதிகார தோரணையில் உத்தரவுகளை இட்டதும் இங்கே நினைவுகூரத்தக்கவை.

ஏற்கனவே பிணைமுறி மோசடி சம்பந்தமாக ரணில் விமர்சனங்களுக்குள்ளாகியிருந்தார்.ஆனால், அவர் குற்றவாளியென எங்கும் சொல்லப்படவில்லை. ஆனாலும், அது முறையாக விசாரிக்கப்பட்டதா என்ற கேள்வியும் உள்ளது. அதுமட்டுமல்ல, கடந்த ஆட்சிக்காலத்தில் மதுபான அனுமதிப்பத்திரங்கள் ரணிலால் வழங்கப்பட்டன. அரசியல் ஆதரவுக்காக அவை வழங்கப்படவில்லையென்று கூறினாலும் அது தேர்தலுக்கான ஆதரவு கோரி வழங்கப்பட்டவை என்பதை சிறு குழந்தையும் அறியும்.

அதனால் டலஸ் அழகப்பெரும சுமத்தியிருக்கும் இந்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

குறைந்தபட்சம் மக்கள் நிதியை இப்படி வீணாக்கலாமா என்பதை ஆராய்ந்து தவறு நடந்திருப்பது உறுதியானால் அதற்கான நியாயப்பாட்டை ரணிலிடம் கேட்க வேண்டும். பொருளாதார சுமைகளில் மூழ்கிக் கிடக்கும் மக்கள், அரசியல் தலைமைகளின் தவறுகளுக்கும் பொறுப்பேற்க முடியாது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.




# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**01.உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவை நிறுவுதல்**

தேசிய உணவு மற்றும போசாக்குப் பாதுகாப்பை உருவாக்குதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு வழங்குதல் அரசின் முக்கிய பணியாவதுடன், ஒவ்வொரு பிரஜையின் குறைந்தபட்ச உணவுத் தேவை போதியளவிலும் தரப்பண்புடன் கூடியதுமான மலிவாகப் பெற்றுக் கொடுப்பதே அரசின் பிரதான நோக்கமாகும். புதிய அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் அதற்கான பல நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளதுடன், நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உணவுகளும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல், குறைந்தபட்சம் 03 மாதங்களுக்கு போதியளவு அத்தியாவசிய உணவு சுயபாதுகாப்புத் தொகையைப் பேணுதல், நாட்டில் காணப்படும் உணவு இருப்புத் தொடர்பான தரவுத் தொகுதியைப் பேணுதல் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு ஏதுவான உற்பத்திகள், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் போன்ற செயன்முறைகளுக்குத் தனியார் துறையையும் பங்கெடுக்கச் செய்து பயனுள்ள வேலைத்திட்டம் அடையாளங் காணப்பட்டுள்ளது. குறித்த பணிகளுக்கு அதிக கவனத்தைச் செலுத்துதல் உள்ளிட்ட நிறுவன ஒருங்கிணைப்பை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்குக் காப்பு வேலைத்திட்டத்தை ஜனாதிபதி செயலகத்தின் மூலம் ஒருங்கிணைப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புபடும் அனைத்து நிறுவனங்களின் பங்கேற்புடன், தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையிலான விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வின் மூலம் கொள்கை வழிகாட்டலுக்காக விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வணிக, வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்களின் இணைத் தலைமைத்துவத்திலும் பிரதமரின் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்களின் அங்கத்துவத்துடன் கூடிய “உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு” ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02.வலுசக்திக் கட்டமைப்பைப் பலப்படுத்தல் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை ஒருங்கிணைக்கின்ற கருத்திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் நிதியைப் பெற்றுக் கொள்ளல்**

ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதி வழங்கப்படும் மின்சக்திக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் விநியோக வலைய மைப்பை பலப்படுத்தல் மற்றும் நவீன மயப்படுத்துவதற்காக அடையாளங் காணப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரை யாடுவதற்காக 2024.09.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, திறைசேரி பிணையின் அடிப்படையில் வேறு வேறான 02 கடன் ஒப்பந்தங்களின் கீழ் மின்சார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனிக்கு முறையாக 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுமாக 200 மில்லியன் கடன் தொகையை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான பிணை ஒப்பந்தத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கையொப்பமிடுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச் சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03.வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்துக்குரிய காரைநகர் படகு தயாரிப்பு நிலையத்தின் மீள்கட்டமைப்பு**

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்துக்குரிய காரைநகர் படகு தயாரிப்பு நிலையத்தின் மீள்கட்டமைப்புக்காக நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல், தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பெறுகை செய்தல் போன்றவற்றுக்காக நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக 2024.10.21 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடப்படாதிருப்பதுடன், மீன்பிடி, நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, இருதரப்புக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் உத்தேச நிதி வழங்கல் காரைநகர் படகு தயாரிப்பு நிலையத்தின் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கும் புதிய அமைச்சரவை கொள்கை ரீதியான தீர்மானத்தை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**04.பொருளாதார நெருக்கடியால் மீன்பிடித் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் குறைத்து மீன்பிடித் துறையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டம் - 2024**

பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடித் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் குறைத்து மீன்பிடித் துறையை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் நோக்கில் 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் 06 மாதகாலத்துக்கு எரிபொருளாக டீசலைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் படகு உரிமையாளர்களுக்கு ஒரு லீற்றருக்கு 25/- ரூபாவாகவும் எரிபொருளாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகின்ற கடற்றொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 15 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் 25 நாட்களுக்கு மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 25/- ரூபாவாகவும் “மீன்பிடித்துறையை இயல்புநிலைக்குக் கொண்டு வரும் கொடுப்பனவாகப்” பெற்றுக் கொடுப்பதற்கு 2024.08.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, எரிபொருளாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகின்ற சிறிய படகுகளுக்குரிய இச்சலுகையை வழங்குவதற்கு மிகவும் வசதிப்படுத்தும் நோக்கில் மீன்பிடி மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இயங்குநிலையிலுள்ள சிறிய மீன்பிடிப் படகு உரிமையாளர்களுக்கு மாதாந்தம் 9,375/- ரூபா கொடுப்பனவு “மீன்பிடித் துறையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கான கொடுப்பனவாக” 2024.11.01 ஆம் திகதி தொடக்கம் 05 மாத காலத்துக்கு வழங்குவதற்கும் டீசல் மீன்பிடிப் படகு உரிமையாளர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற சலுகைகளை முற்கூட்டியவாறே வழங்குவதற்கும் மீன்பிடி, நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05.சதுப்பு நிலங்கள் தொடர்பான சர்வதேச றம்சார் சமவாயத்தின் பங்காளர்களுக்கான மாநாட்டில் இலங்கை சமர்ப்பிப்பதற்கு இருக்கின்ற முன்மொழிவுகள்**

சதுப்பு நிலங்கள் தொடர்பான சர்வதேச சமவாயம் எனப்படும் றம்சார் சமவாயத்தின் 15 ஆவது பங்காளர்களுக்கான மாநாடு 2025 ஜூலை மாதம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த சம்மேளனத்தில் சமர்ப்பிப்பதற்கு இலங்கையானது “சதுப்பு நிலங்களின் இயற்கை உரித்து” தொடர்பான முன்மொழிவு வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. குறித்த முன்மொழிவுகள் மூலம் உறுப்பு நாடுகள் தமது நாடுகளில் காணப்படுகின்ற சதுப்பு நிலங்களின் இயற்கைக்கான உரித்தை அடையாளங் காண்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க, குறித்த முன்மொழிவானது றம்சார் சமவாயத்தின் 15 ஆவது பங்காளர் களுக்கான மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. ஹொரன ஏற்றுமதி செயன்முறை வலயத்தின் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரக் கூடத்தை மேம்படுத்தல்**

இலங்கை முதலீட்டுச் சபையின் நிதியைப் பயன்படுத்தி ஹொரன ஏற்றுமதி செயன்முறை வலயத்தின் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரக் கூடத்தின் கொள்ளவை அதிகரிப்பதற்காக 2023.06.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக தேசிய போட்டி பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமுறிகள் கோரப்பட்டுள்ளதுடன் 11 விலைமுறிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கிணங்க அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில் ஏற்றுமதி செயன்முறை வலயத்தின் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரக் கூடத்தின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான ஒப்பந்தம் Luminex PLC இற்கு வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. இலங்கை புகையிரத திணைக்களத்துக்கான ALCO டீசல் என்ஜின்கள் 22 இனை இந்திய அரசின் நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளல்**

இலங்கை புகையிரத திணைக்களத்துக்கு சிறியளவில் பயன்படுத்துகின்ற M10 புகையிரத என்ஜின் மாதிரியின் மேம்படுத்தப்பட்ட 20 என்ஜின்கள் மற்றும் குறித்த என்ஜின்களுக்கான பராமரிப்புகளுக்குத் தேவையான உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மேலதிக 02 என்ஜின்களை நன்கொடையாக வழங்குவதற்கு இந்திய புகையிரத திணைக்களம் விருப்பம் தெரிவித்துள்ளது. குறித்த என்ஜின்களின் பராமரிப்பு சேவைகளை ஐந்து வருடகாலத்துக்கு வழங்குவதற்காக கோரப்படாத முன்மொழிவாக இந்தியாவின் பொறியியல் ஆலோசனைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கம்பனியான RITES கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த முன்மொழிவை மதிப்பீடு செய்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டுக்குழு கருத்திட்டக் குழுவை நியமிப்பதற்காக 2024.06.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நன்கொடையாக வழங்கப்படுகின்ற குறித்த புகையிரத என்ஜின்களைப் பராமரிப்பதற்கான இயலுமை இலங்கை புகையிரத திணைக்களத்திடம் காணப்படுவதுடன் திணைக்களத்தின் பணியாளர்கள் குழாமினால் அப்பணிகளை மேற்கொள்வது பொருத்தமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, முதலாவதாக குறித்த நன்கொடை ஒப்பந் தத்தில் கையொப்பமிட்டு 22 புகையிரத என்ஜின்களை நன்கொடையாக இலங்கை அரசு சார்பாகப் பெற்றுக் கொள்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்**

தற்போது ஸ்மார்ட் அட்டை சாரதி அனுமதிப்பத்திர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் கடந்துள்ளதுடன் குறித்த நிறுவனங்களுக்கிடையேயான தரவுப் பரிமாற்ற வசதிகளை வழங்கி புதிய தொழில்நுட்பத்துக்கமைய உலகில் பல நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவது சிறந்ததென அரசு கண்டறிந்துள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற அனுமதிப் பத்திரத்துக்குப் பதிலாக புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தை துரிதமாக அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அதுவரை சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குத் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற முறைமையைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**09. பூகொட நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிர்மாணக் கருத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பீட்டைத் திருத்தம் செய்தல் மற்றும் விலை விலகல்களுக்கான கொடுப்பனவுகளை செய்தல்**

பூகொட நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிர்மாணக் கருத்திட்டத்தின் கீழ் கட்டுமானத்துக்கான நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) விலை விலகல்களுக்கான சூத்திரங்களைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்து உண்மை விலை விலகல்களை முன்னைய நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக நிரந்தரப் பெறுகைக் குழுவின் மீளாய்வின் பின்னர், குறித்த குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் செலுத்துவதற்காக 2023.11.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்துக்கான ஆலோசனைச் சேவைகள் மற்றும் நிர்மாணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனமான பொறியியல் கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலை விலகல்கள் தொடர்பான அறிக்கையை குறித்த அமைச்சின் நிரந்தரப் பெறுகைக் குழுவால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. பூகொட நீதிமன்றக் கட்டிடத்தொகுதி நிர்மாணக் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பீடு 681.2 மில்லியன் ரூபாய்களாகத் திருத்தப்பட்டு குறித்த விலை விலகல்களைச் செலுத்துவதற்கும் கருத்திட்டத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்வதற்கும் நீதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலம் (Proceeds of Crime)**

சட்ட வரைஞரால் வரைபு செய்யப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பான சட்டமூலம் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2024.08.12 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஆயினும், மேற்குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்ட பின்னர் சர்வதேச நாணய நிதியத்தால் பல அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, குறித்த சட்டமூலம் தொடர்பான அடிப்படை வரைபை தயாரிப்பதற்காக முன்னய காலத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் உயர் நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவுக்கு சர்வதேச நாணய நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புகள் அனுப்பப்பட்டுள்ளதுடன், அக்குழுவால் குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பான சட்டமூலத்தில் மேலும் சில ஏற்பாடுகளை உள்ளடக்கி, தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை திருத்தம் செய்ய வேண்டுமென விதந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விதந்துரைகளின் அடிப்படையில் குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பான சட்டமூலத்தைத் தொடர்ந்தும் திருத்தம் செய்யுமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

# இன்றைய நாளில்...

1907 – நியூசிலாந்தின் பாராளுமன்றக் கட்டடம் முற்றாகத் தீக்கிரையானது.

1917 – முதலாம் உலகப் போர்: பிரித்தானியத் தளபதி எட்மண்ட் அலென்பி எருசலேம் நகரை நடந்து சென்றடைந்து அங்கு இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

1925 – கத்தோலிக்க திருச்சபை கிறிஸ்து அரசர் பெருவிழாவை அறிமுகப்படுத்தியது.

1927 – கம்யூனிச செம்படையினர் சீனாவின் குவாங்சௌவில் கிளர்ச்சியை ஏற்படுத்தி, நகரின் பெரும் பகுதியைக் கைப்பற்றி குவாங்சௌ சோவியத்தை அறிவித்தார்கள்.

1931 – அவுஸ்திரேலியா, கனடா, அயர்லாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய மேலாட்சி அரசுகளுக்குத் தமது முழுமையான அரசியலமைப்புகளைப் பேணும் சட்டமூலம் வெஸ்ட்மினிஸ்டர் சட்டம் 1931 பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1946 – ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் அமைக்கப்பட்டது.

1962 – கனடாவில் கடைசி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1964 – சே குவேரா ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றினார். இவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஐ. நா. கட்டடத்தின் மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

1972 – அப்பலோ 17 நிலாவில் இறங்கியது. இதுவே நிலாவில் இறங்கிய ஆறாவதும் கடைசியுமான அப்பலோ திட்டமாகும்.

1993 – மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உயர்மாடிக் கட்டடம் ஒன்று வீழ்ந்ததில் 48 பேர் உயிரிழந்தனர்.

1998 – தாய்லாந்தைச் சேர்ந்த விமானம் வீழ்ந்ததில் 101 பேர் உயிரிழந்தனர்.

2001 – சீனா உலக வணிக அமைப்பில் இணைந்தது.

# நக்கல் நமசிவாயம்

பார் பெர்மிட் கொடுத்தது அரச வருமானத்தை அதிகரிக்கத்தான் என்று ரணில் ஐயா சொல்லுறார்.. அப்படியெண்டா நாடு முழுவதும் சந்திக்கு சந்தி பார்கள திறந்துவிட்டிருக்கலாமே...



# முல்லையில் மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனி








*விஜயரத்தினம் சரவணன்*

'மீனவ சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலம் கண்ணியமான வாழ்வுக்கு எம்மை அர்ப்பணிப்போம். உணவு இறையாண்மையை உறுதிசெய்வோம்' எனும் தொனிப்பொருளில் முல்லைத்தீவில் நேற்று (10) தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனியொன்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்த நடைபவனியானது, முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபம் வரை இடம்பெற்றது.

குறித்த நடைபவனியில் ஈடுபட்டிருந்தவர்கள் இந்தியன் இழுவைமடி ஆக்கிரமிப்பை நிறுத்துதல், மீனவ சட்டத்தை உடன் அமுல்படுத்துதல், சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளை முற்றாகத் தடைசெய்தல், கனியமணல் அகழ்வைக் கட்டுப்படுத்தல், சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பண்ணை வளர்ப்புத் திட்டங்களை நிறுத்துதல், காற்றாலை மின்சாரத் திட்டத்தைத் தடைசெய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்களை எழுப்பியவாறும் பாதாகைகளைத் தாங்கியவாறும் நடைபவனியில் ஈடுபட்டனர்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் 16 மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபத்தில் உலக மீனவ தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

# சிறப்பாக இடம்பெற்ற வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா










*சிவகுமார் திவியா*

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும் வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா கடந்த சனிக்கிழமை (07) வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், ஆக்க இலக்கியத் துறைக்கான வவுனியம் விருது ஊடகவியலாளர் சிவகுமார் திவியந்தினிக்கு வழங்கப்பட்டதுடன், மேலும் பல்வேறு துறைகளில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்திய 6 பேருக்கு வவுனியம் விருதும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மணல் கடத்தல்; சாரதி மடக்கிப்பிடிப்பு!

*பு.கஜிந்தன்*

பருத்தித்துறையிலிருந்து மணல் கடத்தப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட ரிப்பரை விசேட அதிரடிப்படையினர் துரத்திச் சென்றனர்.

இதன்போது கொடிகாமம் ஊடாக மந்துவில் பகுதியால் குறித்த ரிப்பர் சென்றுகொண்டிருந்தவேளை மண்ணை வீதியில் கொட்டிவிட்டு சாவகச்சேரி - கைதடி வீதியால் செல்லும்போது அவ்விடத்தில் வைத்து ரிப்பருடன் சாரதி மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வன்னியில் 338 பேர் தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிப்பு

வன்னி தேர்தல் மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) வரை 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், சில தரப்புகள் பதிவுத்தபாலில் அவற்றை அனுப்பியுள்ளதால் கிடைக்கப்பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தங்களது தேர்தல் செலவு அறிக்கையை கடந்த 06ஆம் திகதி நள்ளிரவுக்கிடையில் சமர்ப்பிக்க வேண்டுமென்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அந்தவகையில், வன்னி தேர்தல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை 14 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாக மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 25 சுயேச்சைக்குழுக்கள் என மொத்தமாக 48 தரப்புகளைச் சேர்ந்த 432 பேரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

அவர்களில் 5 சுயேச்சைகுழுக்களினதும் 9 அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 14 தரப்புகளின் செலவு அறிக்கை நேற்றுமுன்தினம் வரை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில தரப்புகள் பதிவுத்தபாலில் செலவு அறிக்கையை அனுப்பிவைத்துள்ள நிலையில், அவை கிடைக்கப்பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்ப்பாணத்தில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள்



யாழ்ப்பாணம், வடமராட்சி, பருத்தித்துறை கிராமக்கோடு பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சத்தமொன்று கேட்டுள்ள நிலையில், திருடன் என எண்ணி அயலிலுள்ள மக்கள் வீடுகளுக்குள்ளேயே அச்சத்துடன் இருந்திருக்கிறார்கள். விடிந்ததும் வெளியே வந்துபார்த்தபோது மோட்டார் சைக்கிளொன்று காணப்பட்டுள்ளது. அங்கு சென்று பார்த்தபோது மாதா சொரூபத்தோடு மோட்டார் சைக்கிள் மோதிய நிலையில் காணப்பட்டுள்ளது. இந்நிலையில், அயலவர்கள் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அங்கு சென்ற பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரான்ஸ்பரன்ஸி இன்ரநெஷனல் நிறுவனத்தால் இளைஞர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா



*சிவகுமார் திவியா*

சர்வதேச இலஞ்ச ஊழல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ரான்ஸ்பரன்ஸி இன்ரநெஷனல் நிறுவனத்தால் இளைஞர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா நேற்று வவுனியாவிலுள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

'ஊழலுக்கெதிரான நாளைய தேசத்தை உருவாக்குவதில் நாம் ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இக்கட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் கௌரீஸ்வரன், வவுனியா முகாமையாளர் செல்வலக்ஷ்மி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தினேஷ்குமார், எழுத்தாளர் சகாயநாதன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ந.கபிலநாத் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த 165 இளைஞர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பளத்தை உயர்த்தக்கோரி கொத்மலை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு





*நீலமேகம் பிரசாந்த், மஸ்கெலியா நிருபர், பொகந்தலாவை நிருபர்*

கொத்மலை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் அடிப்படைச் சம்பளத்தை 5,000 ரூபாவாக உயர்த்தக்கோரி நேற்று (10) தொழிற்சாலை முன்பாக பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரும் கடந்த புதன்கிழமையிலிருந்து சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு தொழிற்சாலை நிர்வாகத்தைக் கோரிவந்த நிலையிலேயே நேற்றைய தினம் அனைத்து ஊழியர்களும் காலை முதல் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

போராட்டத்துக்கு நேற்று உரிய தீர்வு கிடைக்கவில்லையெனவும் தொழிற்சாலை நிர்வாக ஊழியர்களும் உறுப்பினர்களும் நேற்று தொழிற்சாலைக்கு சமுகம் தரவில்லையெனவும் கொத்மலை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பதுளையில் ஆணொருவரின் சடலம் மீட்பு



*ராமு தனராஜா*

பதுளை ரயில்நிலைய நுழைவாயிலுக்கருகில் நேற்று (10) அதிகாலை ஆணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பதுளை ரயில் நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.


சடலமாக மீட்கப்பட்டவர் சுமார் 75 வயது மதிக்கத்தக்கவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் ஒருவர் படுத்திருப்பதை ரயில்வே பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் அவதானித்துள்ளனர். அவரை எழுப்பியபோது அவர் எழும்பவில்லையெனவும் பின்னர் அவர் இறந்துவிட்டாரெனத் தெரியவந்ததாகவும் ரயில் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென்பதுடன், பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குரங்குகளின் கர்ப்பத்தைக் கட்டுப்படுத்த வளையம் பொருத்தும் ஆரம்பகட்ட நடவடிக்கை வெற்றி





*எம்.ஏ.அமீனுல்லா*

இலங்கையில் குரங்குகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக குரங்குகளின் கர்ப்பத்தைத் தடுக்கும் நோக்கில் ஆறு குரங்குகளின் வயிற்றில் வளையம் (லூப்) பொருத்தும் ஆரம்பகட்ட நடவடிக்கை வெற்றியடைந்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவபீடப் பேராசிரியர் அசோக தங்கொல்ல தெரிவித்துள்ளார்.

மேலும், களத்திலிறங்கி இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பது அவசியமானதெனவும் அவர் தெரிவித்தார்.

அறுவை சிகிச்சைக்கு இரண்டு மாதங்களுக்குப் பின்னர் லூப் பொருத்தப்பட்ட மூன்று குரங்குகளின் எக்ஸ்ரே எடுக்கப்பட்டபோது குறித்த வளையம் பாதுகாப்பாக இருப்பதைக் காட்டியமை உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் இந்நாட்டில் குரங்குகளின் பெருக்கெடுப்புத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக ஒரு குரங்கு ஒன்றரை வருடங்களுக்குள் இரண்டு தடவைகள் பிரசவிக்கும். அதனால் இந்த நாட்டில் குரங்குகளின் எண்ணிக்கை கணிசமாகக் கூடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இதுவரை நாட்டிலுள்ள மொத்த குரங்குகளின் எண்ணிக்கை குறித்து முறையாக தொகுக்கப்பட்ட தரவு எதுவும் தற்போது இல்லையென்றும் பேராசிரியர் வலியுறுத்தினார்.

இவ்வாறான பணியை முன்னெடுக்க முதற்கட்டமாக 1,300 ரூபா செலவில் செய்யலாமென்றும் இந்த முறையை களத்தில் பரிசோதனை செய்யவேண்டுமெனவும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமிடத்து குரங்கினத்தைக் கொல்லாமலும் அவைகளை இடமாற்றம் செய்யாமலும் கட்டுப்படுத்த முடியுமெனவும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

# மத்திய மாகாண முதலமைச்சின் செயலாளர் கடமை பொறுப்பேற்பு

*எம்.ஏ.அமீனுல்லா*



மத்திய மாகாண முதலமைச்சு மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றின் செயலாளராக நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தையுடைய எச்.எம்.மதுபானி பியசேன நேற்று முன்தினம் (09) பல்லேகல மாகாண சபை வளாகத்திலுள்ள உள்நாட்டலுவல்கள் மற்றும் கல்வி அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ்.அபயகோன் இந்நியமனத்தை நேற்று முன்தினம் வழங்கினார்.

மதுபானி பியசேன, கண்டியிலுள்ள ஹில்வுட் மற்றும் உயர் பெண்கள் கல்லூரிகளில் கல்வியைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி மற்றும் முதுகலை கலைமாணி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். களனிப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணி பட்டத்தைப் பெற்ற பின்னர், 2000ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்துகொண்டார்.

அரச சேவையில் தனது முதல் நியமனமாக மத்திய மாகாண சபையின் விவசாய அமைச்சின் உதவிச் செயலாளராகவும் பின்னர் மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராகவும் உதவிப் பிரதேச செயலாளராகவும் தனது கடமைகளை ஆரம்பித்தார். ஹாரிஸ்பத்து, கங்கவட கோரலய, நாவலப்பிட்டி மற்றும் பத்தஹேவாஹெட்ட ஆகிய பிரதேச செயலகங்களில் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# கார்த்திகை தீபத் திருவிழா

*டி.வசந்த்*

கம்பளை நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை (13) திரயோதசி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.00மணி சுப வேளையில் எல்லாம் வல்ல ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு விசேட அஷ்டோத்ர சத (108) சங்காபிஷேகம் நடைபெற்று பகல் 12.30 மணிக்கு மஹேஸ்வர பூஜையுடன் அன்னதானம் வழங்கப்படும். மாலை 6.00 மணிமுதல் தீபம் வைத்தல் நிகழ்வு இடம்பெற்று தொடர்ந்து விஷேட வசந்தமண்டப பூஜையுடன ஸ்ரீவிநாயகர், ஸ்ரீவள்ளி, ஸ்ரீதேவயானி சமேத ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி உள்வீதி உலா நடைபெறவுள்ளது.

# உணவகத்தில் தனியார் வங்கி அதிகாரிகளின் சந்திப்பில் கைகலப்பு: முகாமையாளர் காயம்!

*எம்.ஏ.அமீனுல்லா*

கண்டி, கட்டுகஸ்தோட்டை, நித்தவெல பிரதேசத்திலுள்ள விளையாட்டுக் கழகத்துக்குச் சொந்தமான உணவகத்தில் இடம்பெற்ற தனியார் வங்கி அதிகாரிகளினது சந்திப்பின்போது ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த வங்கி முகாமையாளர் சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர் சம்பந்தப்பட்ட வங்கியின் மாவட்ட முகாமையாளரென்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த உணவகத்தின் சிசிரிவி கமெரா அமைப்புகளைச் சோதனை செய்த பின்னர் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படுவார்களென பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# உள்ளூரில் தயாரித்த கைக்குண்டுடன் சந்தேக நபரொருவர் மஹியங்கனையில் கைது

*ராமு தனராஜா*

மஹியங்கனை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) மாலை உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டொன்றுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் 26 வயதுடைய மஹியங்கனை தொடங்வத்தை 20ஆவது வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை மகாவலி கங்கை பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், குறித்த பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞரொருவர் நடமாடியதை அவதானித்துள்ளனர்.

பின்னர் சந்தேக நபரை அணுகி அவரை சோதனைக்குட்படுத்தியபோது அவரிடமிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த கைக்குண்டை எதற்காக அவர் கொண்டு சென்றார், எங்கிருந்து பெற்றார், குற்றச்செயல்கள் எதற்கும் பயன்படுத்தக் கொண்டுசென்றாரா என பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை இன்றைய தினம் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மஹியங்கனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மரணச் சான்றிதழ்தான் பதிலென்றால் கொலை செய்தவன் யார்?

# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் தீச்சட்டி ஏந்தி நீதிகேட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் பேரணி





*சிவகுமார் திவியா, விஜயரத்தினம் சரவணன்*

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று (10) வடக்கு,கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

வவுனியா கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய குறித்த பேரணி பழைய பஸ் நிலையப் பகுதியில் முடிவடைந்தது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் சங்கம்,

இன்று (நேற்று10) ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் நாளாக உலகம் தோறும் அனுஷ்டிக்கப்படுகிறது. சர்வதேசமும் அனைத்துலகமும் ஈழத் தமிழரைக் கைவிட்ட நிலையில் மனிதர்களாக எம்மைப் பார்ப்பதில்லை. எந்த உரிமையும் வழங்கப்படவில்லை. நமக்கு சர்வதேச நீதி கிடைக்குமா என்ற கேள்வியோடு இந்தத் தினத்தில் நாம் போராடி வருகிறோம்.

உள்நாட்டுப் பொறிமுறையில் நம்பிக்கையில்லாத நிலையில், ஐ.நா. அனைத்துலக சாசனத்துக்கமைய ஐக்கிய நாடுகளின் அவையின் கீழ் சர்வதேச நீதிப் பொறிமுறையை நாடிநிற்கின்றோம்.

எங்களது உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களேயன்றி அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அல்லர். இன்று குழந்தைகளும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வரிசையில் இலங்கை சர்வதேச ரீதியில் முதலாம் இடத்தில் இருக்கின்றன.

எமது 40க்கும் மேற்பட்ட குழந்தைகளின் முகங்கள் இன்றும் எம் கண்முன்னே அழியாத உயிர்ப்புகளாக மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. இறுதிப்போரில் வலிந்து காணாமல்போன உறவுகளின் வரிசையில் இந்தக் குழந்தைகள் என்ன ஆனார்கள் என்ற விம்மலும் கண்ணீரும் இன்னும் எம்மை வருத்துகின்றன. எமக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை நாம் சர்வதேசத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

இது அன்னையர் தினமோ, ஆசிரியர் தினமோ எனக்கூறி கடந்து செல்ல முடியாது. இது மனித உரிமைகள் தினம். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். எம் உயிருக்கும் மேலான வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும் எம்மையும் மதிக்க வேண்டும். மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்.

ஆனால், இலங்கையில் பல்லாயிரம் உயிர்கள் கொல்லப்பட்டும் பல்லாயிரம் பேர் காணாமலாக்கப்பட்டும் உள்ளனர். இதுவரை வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடிய முன்னூறுக்கும் அதிகமான உறவுகள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உறவுகளை இனி யார் தேடுவது? எப்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நீதி கிடைத்து எம்மைப்போல் அழுபவர்களின் குரல் ஓய்கிறதோ, அன்றுதான் எமக்கு மனித உரிமைகள் தினம் என்றனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு நகர சுற்றுவட்ட வீதியில் குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு கொலைகாரனால் நீதி வழங்கமுடியுமா?, பிள்ளைகளைத் தினம் தேடிக்கொண்டே நீதியின்றியே இறந்துகொண்டிருக்கின்றோம், ஓ.எம்.பி. ஒரு கண்துடைப்பு நாடகம், கொடுப்பனவுகளைக் கொடுப்போம் என்று செல்வது கொலை செய்த கதையை மறைக்கவே, உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படிக் காணாமல் ஆக்கப்பட்டார்கள்? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள், இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ்தான் பதில் என்றால் கொலைசெய்தவன் யார்?, எங்கே எங்கே உறவுகள் எங்கே?, என கோஷங்களை எழுப்பியும் பதாகைகளைத் தாங்கியவாறும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




**கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய "தமிழர் செவ்வியல் ஆடல்-2024" நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. இதன்போது வெளியிடப்பட்ட "தமிழர் செவ்வியல் ஆடல்" சிறப்பு மலரின் முதல் பிரதியை சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவிடமிருந்து பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் பேராசிரியர் சபா ஜெயராஜா உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.**

# கால்நடை வளர்ப்பாளர்கள் தொடர்ந்தும் எதிர்நோக்கும் மேய்ச்சல் தரைப் பிரச்சினை

## முல்லைத்தீவுக்கு ரவிகரன் எம்.பி. கள விஜயம்




*விஜயரத்தினம் சரவணன்*

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள ஆண்டான்குளம் மற்றும் தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் மேய்ச்சல் தரை இன்மையால் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் பகுதிகளுக்கு நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு அப்பகுதி கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த பகுதிகளில் 5,000க்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்றபோதும் அந்தக் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரையின்மையால் வருடந்தோறும் 50க்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழப்பதாக கால்நடைவளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் பல கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை விற்பனை செய்கின்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேய்ச்சல் தரை தொடர்பான கோரிக்கைகளை உரிய தரப்புகளிடம் பல தடவை முன்வைத்தும், இதுவரையில் அது தொடர்பில் நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, இந்தப் பகுதிகளிலுள்ள கால்நடைகளிலிருந்து நாளொன்றுக்கு 3000லீற்றருக்கும் அதிகமான பால் உற்பத்தி செய்யப்படுவதாகவும் மேய்ச்சல் தரை கிடைக்கப்பெறின் இதனைவிட அதிகளவான பாலுற்பத்தியைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் விவசாயிகள் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் தெரிவித்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

''முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் அனைவருக்குமே இந்த மேய்ச்சல்தரை இல்லாத பிரச்சினை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு மேய்ச்சல் தரையில்லாத பிரச்சினையால் அதிகளவில் கால்நடை உயிரிழப்பு ஏற்படுவதுடன், கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை விற்பனைசெய்கின்ற இக்கட்டான நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அத்தோடு, பாலுற்பத்தியும் மந்தநிலையிலிருப்பதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கால்நடை வளர்ப்பாளர்களின் இந்தப் பாதிப்புநிலையுணர்ந்து அவர்களின் அத்தியாவசிய தேவையாகவுள்ள மேய்ச்சல் தரை வழங்கப்படவேண்டும். மேய்ச்சல் தரைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்'' - என்றார்.

# திகாமடுல்ல மாவட்ட பொதுத் தேர்தல் வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதாவுல்லா முறைப்பாடு

*நூருல் ஹுதா உமர்*

கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிட்ட தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லா, நேற்று (10) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய அலுவலகத்துக்கு விஜயம் செய்து நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய மனுவொன்றை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

திகாமடுல்ல மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் மீள எண்ணப்படவேண்டுமென்பதையும் கடந்த தேர்தல் காலத்தில் தேசிய காங்கிரஸ் தலைவராகத் தன்னைக் குறிவைத்து பின்னப்பட்ட பல நகர்வுகளையும் இடையூறுகளையும் உள்ளடக்கியதான பல்வேறு விடயங்கள் இம்மனுவில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

மனுவைக் கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

''நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் உரிமைகள் திட்டமிடப்பட்ட வகையில் மறுக்கப்பட்டதுடன், வாக்குகள் எண்ணப்பட்டதிலும் பாரதூரமான மோசடிகள் இடம்பெற்றுள்ளன''.

மேலும், கச்சேரியில் எமக்கெதிரான சதிவலை பின்னல் தொடர்ந்து, ஆரம்பத்தில் காலையில் ஒரு விதமாகவும் பின்னர் வேறொரு விதமாகவும் முடிவுகள் அறிவிக்கப்படலாயின. நாம் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முடிவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்பதாக கையொப்பமிட்டுக் கொடுக்கவில்லை. வெளிப்படையாகவே ஆட்சேபித்தோம். ஆனால், புதிய ஜனநாயக முன்னணி 88 வாக்குகளால் தோற்றதாக அறிவிக்கப்பட்டது. நாம் வாக்குகள் எண்ணப்பட வேண்டுமென்று சட்டப்படி முறையாக கச்சேரியில் கோரினோம். ஆனால், வாக்குகள் மீண்டும் எண்ணப்படவே இல்லை. இதை ஆட்சேபித்து கொழும்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எழுத்துமூலம் பல தகவல்களையும் திரட்டியுள்ளோம்.

அவசியம் ஏற்படுகின்ற பட்சத்தில் உயர்நிலை நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்வோம். நீதிக்கான எமது போராட்டம் தொடரும். நாம் கடந்த காலங்களில் அரசியலில் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வெற்றி கண்டிருக்கிறோம்'' - என்றார்.



**அகில இலங்கை குருசாமி ஒன்றியத்தின் பொதுக்குழுக் கூட்டம் கொழும்பு -13, கண்ணார் தெருவில் அமைந்துள்ள அகில இலங்கை பாரத மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஒன்றியத்தின் தலைவராக கே.ராமதாஸ் குருசுவாமி, செயலாளராக பிரம்மஸ்ரீ அலகைய்யர் சசங்கன் சர்மா குருசுவாமி, பொருளாளராக கோகுலன் குருசாமி ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்குச் சென்று ஒன்றியத்தின் கூட்டு அறிக்கை விபரத்தை திணைக்களப் பணிப்பாளருக்கு கையளித்ததுடன், சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்தும் முகமாக கலந்துரையாடலும் இடம்பெற்றது.**

# மகாவலி ஆற்றில் ஆணொருவரின் சடலம் மீட்பு



*எஸ்.கணேசன்*

மகாவலி ஆற்றில் மிதந்து கொண்டிருந்த சடலம் ஒன்று நேற்று (10) மீட்கப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி- ஹப்புகஸ்தலாவ பிரதான வீதி மல்லந்த பாலத்தின் கீழ் மகாவலி ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நாவலப்பிட்டி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

40-45 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத நபரின் சடலம் தொடர்பில் நாவலப்பிட்டி நீதவான் ஸ்தல பரிசோதனையை மேற்கொண்டதுடன், சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.





**கொழும்பு மாவட்ட இலக்கிய கலைவிழா -2024 நேற்றுக் காலை கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார கலந்துகொண்டார். இதன்போது இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (படங்கள்: எம்.நசார்)**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (10.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 181.5898 | 190.9824 |
| கனேடியன் டொலர் | 200.4354 | 209.1232 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.6266 | 41.1965 |
| யூரோ | 300.0871 | 312.6552 |
| ஜப்பான் யென் | 1.8833 | 1.9593 |
| சிங்கப்பூர் டொலர் | 211.7244 | 221.6221 |
| ஸ்ரேலிங் பவுன் | 363.0458 | 377.0625 |
| சுவிஸ் பிராங்ங் | 322.6386 | 338.3688 |
| ஐ.அ. டொலர் | 286.0210 | 294.6338 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 770.2080 |
| குவைட் | குவைட் தினார் | 944.7233 |
| ஓமான் | ஓமான் றியால் | 754.2130 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.6502 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.2842 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.0527 |

# பெண்களுக்கெதிரான வன்முறையை இல்லாதொழிக்கும் 16 நாள் வேலைத்திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு

## பெண்களுக்கென தனி போக்குவரத்து பஸ் சேவையும் ஆரம்பித்துவைப்பு






(கல்லடி செய்தியாளர்)

பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் 16 நாள் வேலைத்திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி மயூரி ஜனன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (10) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

'உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்' எனும் சஞ்சிகை அருவி பெண்கள் வலையமைப்பினால் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், அதன் முதல் பிரதி பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளுக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட சவால்களுக்கான பரிந்துரைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து பெண்கள் மாத்திரம் பயணிக்கக்கூடிய வகையில் அருவி பெண்கள் வலையமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையை மாவட்ட அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைத்ததுடன் ஒரு நாள் இலவச பஸ் சேவையும் நேற்றைய தினம் மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை வரை இடம்பெற்றது.

இதேவேளை, பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக விழிப்புணர்வு ஊர்வலமொன்று காந்தி பூங்கா முன்பாக ஆரம்பமாகி பிரதான பஸ்தரிப்பு நிலையத்தினூடாக தாண்டவன்வெளியைச் சென்றடைந்ததும் நிறைவுக்கு வந்தது.

இந்நிகழ்வுகளில் மட்டக்களப்பு பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலாளர்களான வீ.வாசுதேவன், சிவப்பிரியா வில்வரத்தினம், இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு டிப்போ பொது முகாமையாளர் உள்ளிட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள், பெண்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை கல்வி வலயம் தேசிய ரீதியில் 02ஆம் இடம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை கல்வி வலயம் 2023 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சாதனையைப் பாராட்டி அந்தச் சாதனைக்கு காரணமானவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் இவ்வெற்றிக்கு பங்களிப்பு செய்த வலயத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியினர், வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன் இந்த வெற்றிக்காக தலைமைத்துவம் வழங்கிய கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமுக்கு பாராட்டும் வழங்கினர்.

இந்நிகழ்வில் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# போராடும் தமிழினத்தை இலங்கை அரசு மட்டுமல்ல சர்வதேசமும் ஏமாற்றுகிறது

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன்

(துறைநீலாவணை செய்தியாளர்)



கடந்த பதினைந்து வருடங்களாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய சர்வதேச விசாரணை வேண்டுமென போராடுகிறார்கள். அவர்களை இலங்கை அரசு ஏமாற்றுவதைப்போல் சர்வதேசமும் ஏமாற்றி வருகிறது'' - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமை தினமான நேற்று(10) மட்டக்களப்பு தந்தை செல்வா சதுக்கத்திலிருந்து காந்தி சதுக்கம் வரையான காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் நடத்தப்பட்ட பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இலங்கை ஜனாதிபதிகளின் பெயர்களும் தோற்றங்களும் மாறுகின்றனவே தவிர, அவர்களுடைய செயல் இன்னும் மாறவில்லை. ம, மை, கோ, ர, அ என முன்எழுத்துள்ள பெயர்களை மாற்றி உருவங்கள் ஆட்சிபீடம் ஏறினாலும் உண்மையில் அவர்கள் எவருமே தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, இனப்படுகொலைக்கான நீதி எதையுமே தருவதற்குத் தயாராக இல்லை.

இலங்கை அரசின் நீதியில் நம்பிக்கையில்லாத காரணத்தால்தான் சர்வதேச நீதி தேவையென அனைத்துலக சமூகத்திலும் ஐ.நா.மனித உரிமை ஆணையகத்திலும் தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை அமைப்புகளும் கடந்த பதினைந்து வருடங்களாகப் போராடியும் சர்வதேச நாடுகளுக்கு சென்று முறையிட்டும் வருகிறோம்.

அதைவிட புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் 15 வருடங்களாக ஓயாமல் உழைத்து வருகின்றோம். ஆனால், சர்வதேசமும் இலங்கை அரசைப்போன்றே தமிழினத்தை பதினைந்து வருடங்களாக ஏமாற்றியுள்ளது. அப்படியானால் இனி யாரிடம் எமக்கான நீதியை எதிர்பார்ப்பது?'' - என்றார்.



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (08) உப்புவெளி, சர்வோதயபுர மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர் வைத்தியர் ஹில்மி மற்றும் , கட்சியின் உயர்பீட உறுப்பினர் வைத்தியர் ஹில்மி முகைதீன் பாவா உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.



சமூக சேவை அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய செயலகத்தினால் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட சில மூத்த பிரஜைகளுக்கு காது கேள் கருவிகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(09) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.டி.எம்.இர்பானின் நெறிப்படுத்தலில் செயலகத்தின் முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.ஹைஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்திய நிபுணர் கலந்துகொண்டு பிரஜைகளுக்கு காதுகேள் கருவிகளை வழங்கி வைத்தார்.

(திராய்க்கேணி செய்தியாளர்)

# சிங்கள பேச்சுப்பயிற்சி பாடநெறியைப் பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ்

(பெரியநீலாவணை செய்தியாளர்)

புத்தசாசன கலாசார அமைச்சின் கீழ் கல்முனை பிரதேச செயலகத்தினால் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்று வந்த சிங்களப் பேச்சுப் பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு மருதமுனை கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி திருமதி ஜெனித்ரா தேவசந்திர தலைமையில் கலாசார மத்திய நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்றது.

சிங்கள பாட ஆசிரியர் எம்.ஏ.எம். மர்சூக், கலாசார மத்திய நிலைய உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.ஹைதர் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளரும் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருமான ஜெ.லியாகத் அலி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பாடநெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.



இங்கு கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களினால் சிங்கள மொழி மூலமான கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன் சிறுவர்களின் கலாசார நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.



இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் எச்.இபதிலி ஹிஷாம் ஆதம் நேற்று செவ்வாய்க்கிழமை(10) திருகோணமலைக்கு விஜயம் செய்து கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. (கிண்ணியா செய்தியாளர்)

# வர்த்தக விளம்பரங்களுக்காக டிஜிட்டல் திரை கல்முனையில் திறந்துவைப்பு




(சாய்ந்தமருது செய்தியாளர்)

கல்முனை மாநகர வர்த்தக நிலையங்களின் வர்த்தக விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதற்காக கல்முனை மாநகர சபையினால் அமைக்கப்பட்ட டிஜிட்டல் திரை செவ்வாய்க்கிழமை (10) சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் மற்றும் கல்முனை வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.எம். சித்தீக் உட்பட ஏனைய வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்த டிஜிட்டல் திரையில் வர்த்தக நிலையங்கள் தமது வர்த்தக விளம்பரங்களை காணொளிகளாகவும் புகைப்படங்களாகவும் காட்சிப்படுத்த முடியுமெனவும் இதற்காக நாளாந்த, வாராந்த, மாதாந்த, வருடாந்த பெக்கேஜ் அடிப்படையில் கல்முனை மாநகர சபைக்கு கட்டணங்களைச் செலுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலாளராக எம்.எம்.நஸீர் தனது கடமைகளை திங்கட்கிழமை(09) பொறுப்பேற்றுக் கொண்டார். கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, கடந்த 06ஆம் திகதி மாகாண அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்களை நியமித்து அவர்களுக்கான கடிதங்களையும் வழங்கி வைத்தார். (மீனோடைக்கட்டு செய்தியாளர்)



தேசிய காங்கிரஸின் இளைஞர் அமைப்பாளரும் முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான எம்.எம்.ஸ்ரரஸ் மன்சூரின் முயற்சியினால் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக கல்முனை யங் பேட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான கதிரைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. கல்முனை ஜனாஸா நலன்புரி அமைப்பு காரியாலயத்தில் திங்கட்கிழமை (09) மாலை இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் எம். எம்.மர்சூக், செயலாளர் எம். பாயிஸ் உட்பட உயர்பீட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (அட்டப்பள்ளம் செய்தியாளர்)

# பொலிவேரியன் கிராம மக்களுக்கு இலவச நடமாடும் மருத்துவ முகாம்





(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக்களுக்கு இலவச நடமாடும் மருத்துவ முகாம் திங்கட்கிழமை சாய்ந்தமருது பல்நோக்கு கட்டிடத்தில் இடம்பெற்றது.

Kandy wings of humanity அமைப்பின் அனுசரணையுடன் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜி. சுகுணன் மற்றும் வைத்திய குழுவினர் கலந்து கொண்டனர்.

மேலும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது பொலிவேரியன் கிராமத்துக்கு உட்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

"திசைகாட்டி அரசே திசைமாறாதே, சர்வதேச நீதியைப்பெற்றுக்கொடு"

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நீதிகோரி ஆர்ப்பாட்டம்








(கனகராசா சரவணன், வீரமுனை செய்தியாளர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி மட்டக்களப்பு காந்திபூங்காவில் நேற்று செவ்வாய்க்கிழமை (10) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு தந்தை செல்வா நினைவு பூங்கா வீதி சுற்றுவட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி அ.அமலநாயகி தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான குறித்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், வைத்தியர் இ.சிறிநாத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நடராசா உள்ளிட்ட நூற்றுக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகள் ஒன்று கூடியிருந்தனர்.

இதனையடுத்து, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்களை ஏந்தியவாறு "கொலைகாரர்களால் நீதி வழங்க முடியுமா, நாங்கள் கேட்பது இழப்பீட்டையே மரணச் சான்றிதழையே அல்ல முறையான நீதி விசாரணையை, எமது உரிமை எமது எதிர்காலம் எப்போது, எமது உறவுகள் எங்கே, உள்ளக பொறிமுறைவேண்டாம், சர்வதேச நீதிவேண்டும், எமது பிள்ளைகள் எங்கே எங்கே, திசைகாட்டி அரசே திசைமாறாதே, சர்வதேச நீதியைப்பெற்றுக்கொடு, போர்க்குற்றவாளிகளை விசாரணைசெய், எமது உறவுகளுக்கு நீதிவேண்டும், குற்றவாளிகளை பாதுகாக்காதே'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் மட்டக்களப்பு காந்திபூங்காவை சென்றடைந்தனர்.

இதன்போது தண்டனையின்மைக்கு மத்தியிலான உறுதி: வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டமைப்பான உண்மைக்கும் நீதிக்குமான போராட்டம் என்னும் தலைப்பிலான நூல் ஒன்றும் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினால் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இதன்போது மேற்படி சங்கத்தினால் சர்வதேச சமூகத்துக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையும் இதன்போது அமைப்பின் செயலாளர் திருமதி சுகந்தியினால் வாசிக்கப்பட்டது.

இந்த போராட்டத்தின்போது பெருமளவான பொலிஸாரும் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்ததுடன் புலனாய்வாளர்களினால் புகைப்படங்களும் எடுக்கப்பட்டன.

"நாங்கள் கேட்பது முறையான நீதி விசாரணை"

# திருகோணமலையில் மனித உரிமைகள் தினத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்






(கிண்ணியா செய்தியாளர்)

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று(10) திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தியது.

''நாங்கள் உண்மை மற்றும் நீதிக்காகத் தொடர்ந்தும் போராடுகிறோம். நாங்கள் கேட்பது இழப்பீட்டையோ மரணச் சான்றிதழையோ அல்ல. முறையான நீதி விசாரணையையே'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்ததுடன் ''வேண்டாம் வேண்டாம் OMP வேண்டாம், மனித உரிமைகள் இல்லாத நேரத்தில் மனித உரிமைகள் தினம் எதற்கு?, சர்வதேச நீதி வேண்டும்; வெள்ளைவானில் கடத்திய எங்கள் பிள்ளைகள் எங்கே?, வேலைக்குச் சென்ற - பாடசாலை சென்ற எங்கள் பிள்ளைகள் எங்கே?'' போன்ற கோஷங்களையும் எழுப்பினர்.

உங்கள் இராணுவத்தை நம்பி ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் போனார்கள்? போன்ற கேள்வியையும் வாசகத்தில் உள்ளடக்கியிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த குறித்த சங்கத்தின் தலைவி செபஸ்டியன் தேவி, ''கடந்த 15 வருடங்களாக ஏமாற்றப்பட்டு வருகிறோம். இந்த மனித உரிமைகள் தினம் எதற்கு? இந்த அரசாங்கத்தின் வருகையின் பின் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகிறோம். ஏன் இதனைச் செய்கிறார்கள்? சர்வதேச நீதிப் பொறிமுறை தான் எமக்குத் தேவை. உள்நாட்டுப் பொறிமுறை என்பது வெறும் கண்துடைப்பு. எனவே, தீர்வைப் பெற்றுத்தரும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும். இந்த அரசாங்கம் அவர் சார்ந்த சமூகத்தையே பார்க்கிறது. தமிழ் மக்களுக்கான எந்தவித தீர்வும் இல்லை'' - என்றார்.

இப்போராட்டத்தில் சுமார் நூற்றுக்கும் அதிகமான காணாமல் போனவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் முஸ்லிம் சமூகத்தின் மேம்பாடு தொடர்பில் திட்டம் தயாரிக்கும் மாநாடு



(ஏறாவூர் செய்தியாளர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் முஸ்லிம் சமூகத்தின் மேம்பாடு தொடர்பாக ஆராய்ந்து திட்டம் தயாரிக்கும் உயர்மட்ட மாநாடு சமூக செயற்பாட்டாளர் ஏ.ஆர். பிரெளஸ் தலைமையில் ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.



கல்வியியலாளர்கள், அரச துறை அதிகாரிகள், சமூக நலன்விரும்பிகள், தன்னார்வத் தொண்டர் அமைப்புகளின் பிரிதிநிதிகள், தனவந்தர்கள், சமய மற்றும் சமூக முக்கியஸ்தர்கள் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் சட்டத்தரணி எம்.எம்.ஜவாத் இக்கூட்டத்தில் முக்கிய வகிபாகம் வகித்திருந்தார். சமூக சேவைக்கான பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் மற்றும் இமாம் கஸ்ஸாலி பவுண்டேஷன் ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைப்பில் இம்மாநாடு கூட்டப்பட்டது.

குறிப்பாக, ஏறாவூரின் எதிர்கால சமூகத்தை கல்வி மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் மேம்படுத்துவதற்கான நீண்டகால மற்றும் குறுகிய காலத் திட்டம் தயாரிப்பது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது. அதனடிப்படையில் கல்வித்துறைக்கென அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான விசேட திட்டமொன்றைத் தயாரித்து அமுல்செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக வறிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒருமாத காலத்தில் இந்த நடவடிக்கை நிறைவுசெய்யப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரமளவில் பெரியளவிலான ஒருநாள் மாநாட்டை நடத்துவதென்றும் இதற்காக சமூகத்தில் இன்னமுமுள்ள தனவந்தர்கள், கல்விமான்களையும் அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூரில் நீண்டகாலமாக மாணவர்களை பொதுப்பரீட்சைகளில் சித்தியடையச்செய்து அரசாங்க வேலைவாய்ப்பை நோக்கி நகரும் சம்பிரதாய கல்வி முறைமை பின்பற்றப்படுவதனால் சமூக மாற்றங்களைக் காணமுடியாதுள்ளதாக இம்மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் கல்வித்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை கல்வியியலாளர்களாகவும் ஏனைய மாணவர்களை அவரவர் ஆர்வமுள்ள துறைகளில் ஈடுபடுத்தி சமூக நலன்கொண்ட தனவந்தர்களாக மாற்றும் வழிவகைகள் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் தொடர்பாகவும் இம்மாநாட்டில் ஆராய்ந்து முடிவுசெய்யப்பட்டது.

# தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி மகஜர்



(தம்பலகாமம் செய்தியாளர்)

பல வருட காலமாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் சங்கத்தினர் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவை திங்கட்கிழமை(10) சந்தித்து மகஜரொன்றைக் கையளித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 200 தொண்டர் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் ஒரு சில குறைபாடுகள் காரணமாகவும் சிலருடைய ஆவணங்கள் யுத்தத்தின்போது சேதமடைந்தமையாலும் பலருக்கும் நியமனம் கிடைக்கப்பெறவில்லை. இது விடயமாக கிழக்கு மாகாண ஆளுநருக்கு எத்திவைக்கப்பட்டதோடு தொண்டராசிரியர்கள் நியமனம் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

இதன்போது கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் சங்கத் தலைவர் ஏ.எம்.அஸ்வின், செயலாளர் எஸ்.மதிவதனன், உப தலைவர் எஸ்.ஜே.சித்ரா மற்றும் ஆலோசகர்களாக என்.எம்.சிப்லி, ஏ.டபிள்யூ.பாரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கல்முனையில் தேங்காய் விலையில் திடீர் அதிகரிப்பு



(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்முனைப் பிராந்தியத்தில் தேங்காயின் விலை திடீரென எகிறத்தொடங்கியுள்ளதுடன் விற்பனையில் தேக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரு தேங்காயின் அதிகூடிய விலை 140 ரூபாவாகக் காணப்படுவதுடன் சில இடங்களில் 130 ரூபாவாகவும் உள்ளது.

விலை இன்னும் அதிகரித்துவிடுமோ எனும் நோக்கில் பொதுமக்கள் அதிகளவு தேங்காய்களைக் கொள்வனவு செய்து சேமித்தும் வருகின்றனர். இதேவேளை, தேங்காய் விலை அதிகரிப்பால் சில உணவுப் பண்டங்களின் விலையும் அதிகரித்துள்ளது.

சந்தையில் மாத்திரமன்றி பாதையோரங் களிலும் தேங்காய் விற்பனை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாரிய சத்தத்துடன் வெடித்த வீட்டு மின்மானியால் பதற்றம்

## தீப்பரவலைத் தடுத்த மின்சார சபை



(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி முதலாம் குறிச்சி, ஸாவியா வீதி, ஜீ.எஸ்.லேனிலுள்ள வீடொன்றில் திடீரென பாரிய சத்தத்துடன் மின்மானி வெடித்து தீப்பிடித்து எரிந்தமையால் அப்பிரதேசத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடனடியாக இலங்கை மின்சார சபை காத்தான்குடி மின் அத்தியட்சகருடன் தொடர்புகொண்டு விடயத்தைத் தெரியப்படுத்தியதையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த மின்சார சபை ஊழியர்கள் தீ ஏனைய இடங்களுக்கும் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அவசரமாக மின்சார சபை ஊழியர்களை ஸ்தலத்துக்கு அனுப்பி தீ பரவாமல் தடுத்தமைக்காக குறித்த மின்சார சபை அதிகாரிக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# மூதூர் பிரதேசத்தில் தென்னை மரங்களை அழித்து காட்டு யானைகள் அட்டகாசம்



(சீனக்குடா செய்தியாளர்)

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இறால்குழி - நாவலடி கிராமத்துக்குள் ஞாயிற்றுக்கிழமை (08) இரவு காட்டு யானைகள் உட்புகுந்து, பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாக கிராமவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளதோடு, வீடொன்றையும் சேதப்படுத்தியுள்ளது. இந்நிலையில் அவ்வீட்டில் குடியிருந்த கணவன், மனைவி மற்றும் 05 பிள்ளைகளையும் பலத்த போராட்டத்துக்கு மத்தியில் அயலவர்களின் உதவியுடன் பாதுகாப்பாக வெளியேற்றியதாகக் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுப் பகுதிக்குள் இருந்து வந்து ஊருக்குள் நுழையும் காட்டு யானைகள் அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வாதாரமாக விளங்கிவரும் தென்னை மரங்களை தொடர்ச்சியாக அழித்து வருவதாக அங்கு வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தொடர்ச்சியாக இந்தக் கிராமத்தை காட்டு யானை தாக்கி வருவதால் ஒவ்வொரு இரவையும் அச்சத்தோடுதான் கழித்து வருவதாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

யுத்தத்துக்குப் பின்னர் மீள்குடியேற்றப்பட்ட இந்த நாவலடி கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் நிம்மதியாக வாழ்வதற்கு தங்களுக்கு வழி செய்யுமாறும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை விவசாயிகள் தொடர்பில் கலந்துரையாடல்

## இழப்பீடு வழங்குவது குறித்து தாஹிர் எம்.பி. தலைமையில் ஆராய்வு





(அட்டாளைச்சேனை செய்தியாளர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான அம்பாறை மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் திங்கட்கிழமை(09) நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிர் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்கள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள், விவசாய அமைப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வெள்ள அனர்த்தத்தின் போது பாதிப்புக்குள்ளான நெற்செய்கைகள், சேதமடைந்த நெற்காணிகள், உடைப்பெடுத்த கால்வாய்கள், சிறிய ரக வாய்க்கால்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை, இயற்கைச் சீற்றத்தினால் பதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கான இழப்பீடுகள் வழங்குதல், சேதமடைந்துள்ள வயற் பிரதேச வீதிகள் புனரமைப்பு குறித்து துறைசார் நிபுணர்களிடம் கேட்டறிந்த தாஹிர் எம்.பி., குறித்த விடயங்களுக்கான விரைவான தீர்வை நோக்கி தான் செயற்பட்டு வருவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## இம்முறையும் 70% வரையான பிரத்தியேக தள்ளுபடிகளை வழங்கும் சம்பத் கார்ட்ஸ்





பருவகாலம் நெருங்கி வரும் நிலையில், 2024 நவம்பர் 15 முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் பல்வகைப்பட்ட வர்த்தக மையங்களில் 70% வரையான பிரத்தியேக தள்ளுபடிகளை வழங்கி அனைத்து சம்பத் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டைதாரர்களையும் சம்பத் கார்ட்ஸ் மகிழ்விக்கின்றது.

பண்டிகைகளின் போது தான் வழக்கமாக வழங்கும் தள்ளுபடிகளுக்கும் மேலான சலுகைகளை சம்பத் வங்கி இப்பண்டிகைக்காலத்தில் வழங்கி, விசுவாசம் மிக்க தனது வாடிக்கையாளர்களுக்கு பிரதியுபகாரம் செய்யும் தனது பாரம்பரியத்தை மீண்டும் பிரதிபலிக்கச் செய்துள்ளது. பருவகால கொள்வனவு மற்றும் விருந்துபசாரங்கள் அனைத்துக்கும் அவசியமாகக் கொண்டிருக்க வேண்டிய ஓர் அட்டையாக சம்பத் கார்ட்ஸ் திகழ்வதுடன், பருவகாலத்தில் கிடைக்கும் அநேகமான சலுகைகள் அனைத்தையும் தனது வாடிக்கையாளர்கள் பெற்று அனுபவிக்க இடமளிக்கின்றது.

சம்பத் வங்கி அட்டை மையத்தின் உதவிப் பொது முகாமையாளர் ஷிரான் கொஸ்சின்ன இந்த ஊக்குவிப்பு சலுகை குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "சம்பத் வங்கி, வெறுமனே வங்கிச்சேவைகளுக்கும் அப்பாற்பட்ட சிறப்புச் சலுகைகளை வழங்குவதில் பெருமை கொள்கின்றது. எமது வாடிக்கையாளர்களுக்கு மறக்கமுடியாத நினைவுகளைத் தோற்றுவிக்கும் அனுபவங்களை நாம் அவர்களுக்கு வழங்குகின்றோம். எம்மீது தொடர்ச்சியாக நம்பிக்கை கொண்டுள்ள எமது அட்டைதாரர்களுக்கு எமது நன்றியை வெளிப்படுத்தும் ஒரு வழியாக இப்பருவகால சலுகைகளை நாம் அவர்களுக்கு வழங்குவதுடன், பருவகால கொள்வனவுகள் அனைத்தும் அவர்களுக்கு வெகுமதியளிப்பவையாக அமைவதை எம்மால் சாத்தியமான வரை உறுதி செய்கின்றோம். ஆண்டுதோறும் 'தொடர்ந்தும் கொடுக்கும் பரிசாக' இது அவர்களுக்கு அமையப்பெறுவதை இலக்காகக் கொண்டு ஒப்பற்ற சலுகைகள் மற்றும் பருவகால மதிப்புடன் எமது அட்டைதாரர்களை மகிழ்விக்கும் அனுபவங்களை வழங்கும் எமது அர்ப்பணிப்பை இதன் மூலமாக நிறைவேற்றி வருகின்றோம்" - என்று குறிப்பிட்டார்.

## நவீன வசதிகளுடன் மெருகேற்றப்பட்ட நிலையில் மீண்டும் திறந்துவைக்கப்பட்டுள்ள கேப் வெலிகம உல்லாச விடுதி

தென் பகுதியில் 270 பாகை கடல் காட்சிகளைக் கொண்ட 12 ஏக்கர் வெப்பமண்டல தோட்டங்களில் இயற்கை அழகுடன் குன்றின் மேல் அமைந்ததாகத் தோற்றமளிக்கும் கேப் வெலிகம உல்லாச விடுதியானது [Resort] நவீன வசதிகளுடன் மெருகேற்றப்பட்ட நிலையில் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'தென் கடற்கரையின் மகுடம்' என்று அழைக்கப்படும் இந்த விடுதியானது தற்போது தெரிந்தெடுக்கப்பட்ட கடல் உல்லாசப் பயணங்கள், சமையல் பயணங்கள் மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கோவ் கடற்கரை உட்பட விரிவாக்கப்பட்ட விருந்தினர் அனுபவங்களை வழங்குகிறது. இந்த மேம்பாட்டு அம்சங்கள் விருந்தினர்கள் மற்றும் இலங்கையின் தென் கடற்கரையின் துடிப்பான கலாசாரம் மற்றும் இயற்கை அழகு ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### இலங்கையின் சுற்றுலாப் பொருளாதாரத்தின் தூண்

தென் கடற்கரையானது இலங்கையின் சுற்றுலாத் துறையின் அடிநாதமாக உள்ளது. இது அதிக உயர்தர வசதிகளுடன் கூடிய உல்லாச விடுதிகளை தன்னகத்தே கொண்டதாகத் திகழ்வதுடன், நாட்டின் முதன்மையான பயணத் தலமாக நாட்டின் உலகளாவிய நிலைப்பாட்டில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. கேப் வெலிகமவின் புத்துயிர்ப்பானது உலக அரங்கில் இலங்கையின் ஈர்ப்பாற்றலை உயர்த்துவதற்கு ஆடம்பரப் பயணத்தில் முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.





Resplendent Ceylon இன் தலைவரான மாலிக் ஜே பெர்னாண்டோ இது தொடர்பாக தெரிவிக்கையில், "கேப் வெலிகம போன்ற பெறுமதி வாய்ந்த சொத்தானது விருந்தோம்பலின் தேவையை அதிகரிக்கிறது. ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் முதல் சிறிய தங்குமிடங்கள் வரை அனைத்துக்கும் பயனளிக்கிறது. இது அதிக நிகர மதிப்புள்ள பயணிகளையும் ஈர்க்கிறது. வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா மட்டுமல்ல, சர்வதேச அளவில் நாட்டின் சுயவிவரத்தைப் பறைசாற்றுகிறது என்றார்.

## இலங்கை தென்னை பயிர்ச்செய்கை சபையுடன் கைகோர்த்துள்ள நெஸ்லே நிறுவனம்



'நல்லுணவு நல்வாழ்வு' என்ற கோட்பாட்டுடன் இயங்கி வருகின்ற நெஸ்லே நிறுவனம், தனது தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக, தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு இரு நாள் பயிற்சி நிகழ்வொன்றை நடத்துவதற்காக இலங்கை தென்னை பயிர்ச்செய்கை சபையுடன் கைகோர்த்துள்ளது. லுணுவிலயிலுள்ள இலங்கை தென்னை பயிர்ச்செய்கை சபையின் தென்னை அபிவிருத்தி பயிற்சி மையத்தில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு, தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது தோட்டங்களில் மீளுற்பத்தி விவசாய நடைமுறைகளை அமுல்படுத்தி, தேங்காய் விளைச்சலை மேம்படுத்தி அவர்கள் அதன் மூலமாகப் பயன்பெறும் அதேசமயம், மண் மற்றும் நீர் போன்ற இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாப்பது குறித்தும் அவர்களுக்கு அறிவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் தனது தொழிற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளது. கொள்வனவு நடவடிக்கை மூலமாக, 8,000 க்கும் மேற்பட்ட நடுத்தர மற்றும் பாரியளவிலான தென்னை பயிர்ச்செய்கையாளர்களின் வாழ்வாதாரத்துக்கு இந்நிறுவனம் ஆதரவளித்து வருகின்றது. இதற்குப் புறம்பாக, வீடுகளில் தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களும் தேங்காய் அபிவிருத்தித் திட்டத்தினூடாக பயன்பெறுவதுடன், உள்நாட்டு தேய்காய் உற்பத்தித் துறைக்கு பல பில்லியன் தொகை பங்களிப்பையும் வழங்கி வருகின்றது.

## கொழும்பில் தமது முதன்மை காட்சியறையை திறந்த Evolution Auto (Pvt) Ltd.



**நிலைபேறான மின்சார வாகனங்களின் முன்னோடியான Evolution Auto (Pvt) Ltd., அதன் புரட்சிகரமான RV400 மற்றும் RV400 BRZ மின்சார மோட்டார் சைக்கிள்களைக் காட்சிப்படுத்தும் தனது முதன்மை காட்சியறையை கொழும்பு - மருதானை வீதியில் உத்தியோகபூர்வமாகத் திறந்துள்ளது. இந்தக் காட்சியறையின் திறப்பானது இலங்கையின் சூழல் நட்பு போக்குவரத்தை நோக்கிப் பயணிப்பதற்கான மாற்றத்தில் முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.**

**இந்நிகழ்வில் RattanIndia Enterprises Limited நிறுவனத்தின் தலைவி திருமதி அஞ்சலி ரத்தன், Sino Lanka Private Limited நிறுவனத் தலைவர் பொப் குந்தன்மால், Sino Lanka Private Limited பணிப்பாளர் திரன் குந்தன்மால், Atman குழுமத்தின் பணிப்பாளர்களான நாதன் சிவஞானநாதன், ரஞ்சித் லியோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.**



**இலங்கையின் முன்னணி டயர் உற்பத்தியாளரான சியெட் களனி ஹோல்டிங்ஸ் [CEAT Kelani Holdings] 2024 சர்வதேச தரக் கட்டுப்பாட்டு வட்டங்களுக்கான மாநாட்டில் (ICQCC) ஒன்பது தங்கங்களையும் ஒரு வெள்ளியையும் வென்றுள்ளது. இந்நிகழ்வில் CQCC 2024 இல் வென்ற விருதுகளுடன் சியெட் களனியின் விருது பெற்ற தர மேம்பாட்டுக் குழுக்களை படத்தில் காணலாம்.**

## 'மிச்செலின்' அதிக மதிப்புள்ள கட்டுமான பயன்பாடு தொடர்பான தயாரிப்புகளில் கவனம் செலுத்துகிறது





இலங்கையில் உள்ள மிதிகம டயர் பிரிவு மற்றும் Casting பொருட்கள் பிரிவு ஆகிய தொழிற்சாலைகளை CEAT நிறுவனத்துக்கு விற்பனை செய்தல், தொழில், வேலைவாய்ப்புகள் மற்றும் வாடிக்கையாளர் சலுகைகள் CEAT நிறுவனத்தால் பாதுகாக்கப்படும்.

இதன்படி, Michelin நிறுவனம் இலங்கையில் bias டயர்கள் மற்றும் டிராக்குகளை உற்பத்தி செய்யும் இரண்டு தொழிற்சாலைகளை தொழிற்றுறையில் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளரான CEAT குழுமத்துக்கு விற்பதாக அறிவித்துள்ளது. அதேநேரத்தில், 3 ஆண்டு உரிமக் காலத்தின் முடிவில் உற்பத்தி வசதிகளுக்கு மேலதிகமாக குழுவானது Michelinஇன் பிரபலமான வர்த்தக நாமமான Camsoவின் உரிமையாளராகும் வாய்ப்பு உள்ளது. பணியாளர்களின் அர்ப்பணிப்பு, உயர் செயற்றிறன் மற்றும் உற்பத்தி வசதிகளின் தரம் ஆகியவை இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் வெற்றிக்கு முக்கியமானவை. அதனால்தான் இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் தனது உறுப்பினர்களின் வேலைப் பாதுகாப்பு குறித்து கவனஞ்செலுத்திய Michelin, CEAT உடன் முழு உடன்பாட்டுக்கு வருவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், நிறுவனம் தனது தயாரிப்புகளை உலகெங்கிலும் உள்ள Michelin வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை நிறுவனங்களின் ஒப்புதல்களின்படி செய்யப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களுக்கு (www.michelin.com/en)

## பண்டிகைக் காலத்தில் 'Relaxmas'ஐ கொண்டுவரும் NDB அட்டைகள்

NDB வங்கியானது பண்டிகைக்கால விடுமுறை நெருங்கி வரும் நிலையில், பண்டிகைக் காலத்தை இலகுவாக மகிழ்வுடன் கொண்டாடும் வகையில் Relaxmas எனும் ஒரு தனித்துவமான பண்டிகை அனுபவத்தை அறிமுகப்படுத்துகிறது. இந்தப் புதுமையான கருத்து, நீங்கள் பண்டிகைக் காலத்தை எவ்வாறு கொண்டாடுகிறீர்கள் என்பதை மறுவரையறை செய்கிறது. ஒப்பிடமுடியாத சேமிப்புகள், 36 மாதங்கள் வரையான 0% தவணைத் திட்டங்கள் நிதி பற்றிய கவலைகள் இல்லாமல் இக்காலத்தை ஓய்வெடுக்கவும் மற்றும் அனுபவிக்கவும் சுதந்திரம் அளிக்கிறது.

இந்த ஆண்டு NDB கடனட்டைகளுடன் உங்கள் விடுமுறைகளை உண்மையிலேயே சிறப்பானதாக ஆக்குங்கள்.





பெரிய அளவில் சேமிக்கவும் ஃபேஷன், இலத்திரனியல் பொருட்கள் , உணவு, பயணம் மற்றும் ஆரோக்கியம் போன்ற பிரிவுகளில் 400+ பங்குடைமை வணிகர்களுடன் 60% வரை பிரத்தியேக சேமிப்பை அனுபவிக்கவும் வழி செய்கிறது.

**நெகிழ்வான கொடுப்பனவுகள்:**

36 மாதங்கள் வரை நீடிக்கப்படும் 0% தவணைத் திட்டங்களுடன் பெரிய கொள்முதல்களை நிர்வகிக்கக்கூடிய கட்டணங்களாக மாற்றவும். திட்டமிடுங்கள், ஷொப்பிங் செய்யுங்கள் மற்றும் மன அழுத்தமில்லாமல் கொண்டாடுங்கள்!

இந்த நம்பமுடியாத சலுகைகளை அறிந்துகொள்ள , https://bit.ly/3YW6HH1ஐப் பார்வையிடவும் அல்லது மேலும் தகவலுக்கு NDB அழைப்பு மையத்தை 011 244 8888 இல் தொடர்பு கொள்ளவும்.



**Hemas Consumer Brands (HCB) நிறுவனம், சர்வோதய ஷ்ரமதான இயக்கத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு Fems சனிட்டரி நப்கின்கள், பேபி ஷெரமி சவர்க்காரம், குமாரிகா ஷாம்பு, வெல்வெட் சவர்க்காரம் உள்ளிட்ட பொருட்களை வழங்கி வைத்தது.**

## SLT-MOBITELஇன் mCash - லங்கா சதொச இணைந்து கட்டணப்பட்டியல் திரட்டல் சேவைகள் அறிமுகம்



SLT-MOBITEL இன் முன்னணி மொபைல் பணக் கட்டமைப்பான mCash, லங்கா ச.தொ.ச. உடன் மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக, நாடு முழுவதிலும் காணப்படும் லங்கா ச.தொ.ச. பரந்த வலையமைப்பினூடாக, கட்டணப் பட்டியல் திரட்டல் சேவைகளை வழங்க முன்வந்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்திய விற்பனை அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்தப் பங்காண்மையினூடாக SLT-MOBITEL இன் mCash இனால் வலுவூட்டப் படும் நவீன நிதிசார் தொழில்நுட்ப உட்கட்ட மைப்பினூடாக நாடு முழுவதிலும் காணப் படும் 448 க்கும் அதிகமான லங்கா ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் ஒப்பற்ற கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும். இந்தப் பெறுமதி சேர் திட்டத்தினூடாக, ச.தொ.ச. வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான முறையில் கட்டணப் பட்டியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் கட்டணப்பட்டியல் கொடுப்பனவுகள், காப்புறுதிக் கட்டுப்பணங்கள், நிதியியல் மற்றும் லீசிங் கொடுப்பனவுகள் போன்றவற்றுடன் தமது வழமையான ஷொப்பிங் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூலோபாய பங்காண்மையினூடாக இலங்கையின் பரந்தளவு டிஜிட்டல் பொருளாதார செயற்பாடுகளுக்கு அனுகூலமளிக்கும் பல அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன. அதனூடாக நகர்ப்புற மற்றும் கிராமிய பகுதிகளில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சேவைகளை அணுகும் திறன் பெருமளவு மேம்படுத்தப்படுகின்றது.



# சிரியாவில் கிளர்ச்சிப்படை தலைமையில் இடைக்கால அரசு

இஸ்ரேலின் தாக்குதலில் அழிவுக்குள்ளான சிரியா கடற்படை கப்பல்கள்....



சிரியாவில் 50 ஆண்டு கால அல்-அசாத் குடும்பத்தின் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டுள்ள நிலையில், ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (எச்டிஎஸ்) கிளர்ச்சிப்படை தலைமையில் புதிய ஆட்சி (இடைக்கால அரசு) அமையவுள்ளது.

சிரியாவில் புதிய அரசாங்கத்தை அமைக்க கிளர்ச்சியாளர்களுக்குப் பிரதமர் முஹம்மது ஜலாலி, துணை ஜனாதிபதி ஃபைசல் மேக்தாத் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (எச்டிஎஸ்) என்ற கிளர்ச்சிப்படை கடந்த நவம்பரிலிருந்து ஒவ்வொரு நகரங்களைப் பிடித்துவந்த நிலையில், இறுதியாக ஞாயிறன்று (08ஆம் திகதி) தலைநகர் டமஸ்கஸை கைப்பற்றியது. இதனால், 24 ஆண்டாக ஆட்சிசெய்த ஜனாதிபதி பஷர் அல்-அசாத் நாட்டை விட்டுத் தப்பியோடி தலைமறைவாகிய நிலையில், தற்போது ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இந்நிலையில், தற்போது அங்கு இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளர்ச்சிப்படையின் முக்கிய தலைவர் அஹமது அல்-ஷாரா எனும் அபு முஹம்மது அல்-கொலானி, பிரதமர் முஹம்மது ஜலாலி மற்றும் துணை ஜனாதிபதி ஃபைசல் மேக்தாத் ஆகியோரை இது தொடர்பாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க ஒப்புக்கொண்ட ஜலாலி ஆட்சி மாற்றம் நிறைவடைய சில நாட்களாகுமென அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### போர்க்குற்றத்தில் ஈடுபட்ட அதிகாரிகளுக்குத் தண்டனை

இதனிடையே சிரிய மக்களுக்கு எதிராக சித்திரவதை மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட முன்னாள் மூத்த அரச அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சிரியா கிளர்ச்சிப்படையின் முக்கிய தலைவரான அஹமது அல்-ஷாரா உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

"சிரிய மக்களை சித்திரவதை செய்வதில் ஈடுபட்ட குற்றவாளிகள், கொலைகாரர்கள், பாதுகாப்பு மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் அதற்குப் பொறுப்பேற்க வைக்க நாங்கள் தயங்க மாட்டோம். போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் குறித்து தகவல்களை அளிப்போருக்கு வெகுமதி அளிக்கப்படும்" என்று அஹமது அல்-ஷாரா அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

### ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆலோசனை

சிரியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆலோசனை நடத்தியது. 15 உறுப்பினர்களைக்கொண்ட இச்சபையின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நாவுக்கான ரஷ்யத் தூதர் வசிலி நெபென்சியா,

"சிரியாவின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமையைப் பாதுகாப்பது, குடிமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது, தேவைப்படுபவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் வருவதை உறுதிசெய்வது ஆகியவற்றில் பாதுகாப்புச் சபை ஒன்றுபட்டுள்ளது" என்றார்.

### புகலிடம் வழங்க சுவிட்ஸர்லாந்து மறுப்பு

கிளர்ச்சியாளர்கள் டமஸ்கஸை கைப்பற்றியதைத் தொடர்ந்து அந்நாட்டின் நிலைமையை நன்றாக மதிப்பிடும் வரை சிரியா நாட்டவர்களுக்குப் புகலிடம் அளிக்கப்பட மாட்டாதென்று சுவிட்ஸர்லாந்து அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சுவிட்சர்லாந்து நாட்டின் புலம்பெயரும் மக்களுக்கான மாநில செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிரியா நாட்டவர்களுக்குப் புகலிடம் அளிப்பதற்கான காரணங்கள் நியாயமானதா அல்லது அவர்களை நாடு கடத்துவதற்கான உத்தரவை நிறைவேற்றுவது நியாயமானதா என்பது குறித்து முழுமையாக ஆய்வு நடத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 4,000 சிரியா வீரர்கள் ஈராக்குக்குத் தப்பியோட்டம்

ஜனாதிபதி பஷார் அல்-அசாத் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டதைத் தொடர்ந்து 4,000இற்கும் மேற்பட்ட சிரியா இராணுவ வீரர்கள் எல்லையைத் தாண்டி ஈராக்குக்குத் தப்பியோடியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அசாத் மற்றும் அவரது அதிகாரிகள் மீது போர்க்குற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத் தலைவர் வோல்கர் துர்க் நேற்று தெரிவித்துள்ளார்.

# முடிவுக்கு வரும் உக்ரைன் - ரஷ்யப் போர்

### ட்ரம்ப் அறிவுரை; பேச்சுக்குத் தயாரென்கிறார் புட்டின்



உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியை சந்தித்த ட்ரம்ப் போரை உடனடியாக நிறுத்தவேண்டுமென அறிவுறுத்திய நிலையில், தாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் உலகில் நடக்கும் போர்களை தான் நிறுத்தப்போவதாக அறிவித்தார். இந்நிலையில், பாரிஸில் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி மற்றும் பிரான்ஸ் தலைவர்களைச் சந்தித்த ட்ரம்ப் ரஷ்யாவுக்கு எதிரான போரை உடனே நிறுத்துமாறு அறிவுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்துள்ள ரஷ்ய வெளியுறவுத்துறை போரை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி புட்டின் எப்போதும் தயாராக இருப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும், பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகள் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், சவூதி அரேபியா உள்ளிட்டவை அமைதி ஒப்பந்தத்தை முன்னெடுத்தாலும் தாங்கள் வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளது. நேட்டோவில் இணையும் முடிவைக் கைவிட்டு, மொஸ்கோ உரிமை கோரும் 4 மாகாணங்களையும் தங்களிடம் ஒப்படைத்தால் போர் உடனடியாக நிறுத்தப்படுமென்று கடந்த ஜூன் மாதமே புட்டின் அறிவித்திருந்தார்.

இதனை உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி நிராகரித்த நிலையில், தற்போது ட்ரம்பின் தலையீடு ஒரு நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# தென்கொரிய ஜனாதிபதிக்கு வெளிநாடு செல்லத் தடை



தென்கொரியாவில் அவசரநிலை அறிவித்த விவகாரத்தில் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்-இயோல் வெளிநாடுகளுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் ஜனாதிபதி யூன் சுக்-இயோல் தலைமையிலான மக்கள் அதிகார கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது. கடந்த வாரம் தென்கொரியாவில் இராணுவ அவசரநிலை பிரகடனத்தை யூன் அறிவித்தார். இவரது இந்த முடிவுக்கு ஆளுங்கட்சியிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதனையடுத்து அவசரநிலை கைவிடப்பட்டது. எனினும், அவசர நிலைமையை செயற்படுத்தியதற்காக ஜனாதிபதி பதவி விலகக்கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இதனால் நாட்டு மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்புக் கோரினார். எனினும், அவருக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு பக்கம் அவசரநிலையை பரிந்துரை செய்ததற்காக அவர் மீது விசாரணை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால், யூன் சுக்-இயோல் தப்பிச் செல்லாமலிருக்க - வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய அவருக்கு அரசு தடை விதித்துள்ளது.

## ஊழல் குற்றச்சாட்டு வழக்கு:

# நீதிமன்றில் ஆஜரானார் இஸ்ரேல் பிரதமர்!



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தன் மீதான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காக நேற்று(10) முதன்முறையாக நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகியுள்ளார்.

இஸ்ரேலின் நீண்டகால பிரதமராகவுள்ள பெஞ்சமின் நெதன்யாஹு மீது கடந்த 2020ஆம் ஆண்டு இலஞ்சம், ஊழல் மற்றும் நம்பிக்கை மீறல் குற்றச்சாட்டுகளின் பேரில் 3 வழக்குகள் பதியப்பட்டு விசாரணை தொடங்கியது. இது அரசியல் காரணங்களுக்காக சொல்லப்படும் பொய்க் குற்றச்சாட்டுகள் என அவர் அதனை மறுத்தார்.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் தொடங்கிய இஸ்ரேல் - ஹமாஸ் போரின் விளைவாக இந்த வழக்கு விசாரணை 2 மாதங்கள் நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் 2023ஆம் ஆண்டு டிசம்பரில் ஆரம்பமாகியது.

நெதன்யாஹு மற்றும் இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் கலெண்ட் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 2023 ஒக்டோபர் 08 முதல் 20 மே 2024 வரை செய்த போர்க்குற்றங்கள் தொடர்பாக பிடியாணை பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை கடந்த நவம்பர் 21ஆம் திகதி வெளியிட்டது. இது, நெதன்யாஹு மீதான உள்நாட்டு வழக்கு விசாரணையை மேலும் சிக்கலாக்கியது.

இதனைத் தொடர்ந்து, நவம்பர் 24ஆம் திகதி நெதன்யாஹுவின் சட்டக்குழுவினர் வைத்த கோரிக்கையையேற்று அவரின் விசாரணையை 15 நாட்கள் தள்ளிவைக்க நீதிமன்றம் ஒப்புக்கொண்டது. பின்னர், விசாரணையை மேலும் தள்ளிவைக்குமாறு 12 அமைச்சர்கள் வைத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையில், பாதுகாப்புக் கருதி இந்த வழக்கு விசாரணை டெல்அவிவ் மாவட்ட நீதிமன்றத்தின்கீழ் தளத்திலுள்ள அறையில் நேற்று (10) நடைபெற்றது. இதன்போது நெதன்யாஹு நேரில் ஆஜரானார். அடுத்த 2 வாரங்களுக்கு வாரத்துக்கு 3 தடவைகள் நெதன்யாஹு சாட்சியங்கள் அளிப்பாரென்று இஸ்ரேல் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் கிரிமினல் குற்றங்களுக்காக தண்டனை விதிக்கப்படும் முதல் இஸ்ரேல் பிரதமராக நெதன்யாஹு இருப்பார் என்றும் அவருக்குக் கடுமையான சிறைத்தண்டனை கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# "போரை நிறுத்த முடியாது"

### இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்



"போரை இப்போது நிறுத்த முடியாது. காஸாவில் தாக்குதலைத் தொடர்வோம்" - என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில், இன்று ஓராண்டைக் கடந்தும் போர் நீடித்து வருகிறது.

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 44,758இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், இலட்சக்கணக்கானோர் தங்களின் வாழிடங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில், ஹமாஸ் போராளிகளின் தாக்குதலில் இஸ்ரேலைச் சேர்ந்த 1,208 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக ஹமாஸ் படையினர் பிடித்துச் சென்றுள்ளனர். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒருசிலர் உயிரிழந்த நிலையில், இன்னும் 100இற்கும் மேற்பட்டோரை ஹமாஸ் படையினர் பிடியிலுள்ளனர்.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாங்கள் இப்போது போரை நிறுத்தினால் ஹமாஸ் மீண்டும் வந்து தாக்கலாம். இது நடப்பதை நாங்கள் விரும்பவில்லை. போரை இப்போது நிறுத்த முடியாது. காஸாவில் தாக்குதலைத் தொடர்வோம். ஹமாஸை அழித்தொழித்தல் மற்றும் அதன் இராணுவ மற்றும் நிர்வாகத் திறன்களை ஒழித்தல் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளோம். இந்த இலக்கை நாங்கள் இன்னும் முழுமையாக அடையவில்லை" - என்றார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் தொடர்பான முயற்சிகள் நடைபெற்றும்வரும் நிலையில், "போரை நிறுத்த மாட்டேன்" என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தலைமையில் கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பான கலந்துரையாடல்





2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான அமைச்சரவை மட்டத்திலான ஆரம்ப கலந்துரையாடல்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் ஓர் அங்கமாக கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பான வரவு - செலவுத் திட்ட யோசனைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று (10) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

கல்வி, உயர்கல்வி, தொழில் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய, கல்வி, உயர்கல்வி, தொழில் கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ உட்பட அமைச்சுகளின் அதிகாரிகள் பலர் இதன்போது கலந்துகொண்டனர்.

# வீதியில் பயணித்த நபரொருவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச்சென்ற கார்

## பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு மத்தியிலும் துணிகரம்

கடுவெல - ஹேவாகம பகுதியில் உத்தரவை மீறிச் சென்ற கார் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

குறித்த கார் நேற்று (10) காலை வீதியில் பயணித்த நபர் ஒருவரை மோதிவிட்டு தப்பிச்செல்ல முற்பட்டவேளை குறித்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்போது போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், குறித்த காரை நிறுத்த முயன்றும் பொலிஸாரின் உத்தரவை மீறி காரை முன்னோக்கி செலுத்தியதன் காரணமாக பொலிஸார் இரு முறை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியிலும் குறித்த கார் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வங்கிக் கணக்கில் ஊடுருவி 40 இலட்சம் ரூபா மோசடி!

நுகேகொட பிரதேசத்தில் உள்ள நபரொருவரின் வங்கிக் கணக்கில் ஊடுருவி, அந்தக் கணக்கிலிருந்து 40 இலட்சம் ரூபாவை மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேகநபரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரையே இவ்வாறு விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் (09) உத்தரவிடப்பட்டுள்ளது.

நுகேகொட, திலகரட்ன மாவத்தையைச் சேர்ந்த ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.


முறைப்பாட்டாளர் காணி ஒன்றை விற்பனை செய்வதற்காக இணையத்தில் விளம்பரம் ஒன்றை செய்ததாகவும் அதனை கொள்வனவு செய்வதாக கூறி முறைப்பாட்டாளரின் கணக்கு இலக்கங்களை சந்தேக நபர் பெற்றுக்கொண்டதாகவும் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டாளரின் கணக்கு இலக்கங்களை பெற்றுக்கொண்ட சந்தேகநபர் கணினி தரவு அமைப்பு மூலம் முறைப்பாட்டாளரின் வங்கி கணக்குக்குள் நுழைந்து அதிலிருந்து 40 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளதாகவும் விசாரணை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தனக்கு நெருக்கமான மற்றுமொரு குழுவினருடன் இணைந்து இந்த மோசடிச் செயலைச் செய்துள்ளதாகவும் மோசடியாகப் பெறப்பட்ட பணம் சந்தேக நபரின் ஐந்து வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதவான், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் நிலையில், சந்தேக நபரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# விவசாயப் பயிர்களை சேதப்படுத்தும் குரங்குகளை விரட்ட புதிய சாதனம்



நாட்டின் பல பகுதிகளிலும் விலங்குகளினால் பயிர்களுக்கு பாரியளவில் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

பயிர்ச் சேதத்தை ஏற்படுத்தும் விலங்குகளில் குரங்கு, மந்தி, அணில் மற்றும் காட்டு யானை ஆகியவை முதன்மையானவை.

குறிப்பாக, கேகாலை மாவட்டத்தில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பினால் அந்த மாவட்ட மக்கள் தமது பயிர்களை காப்பாற்ற முடியாமல் அசௌகரியத்துக்குள்ளாகின்றனர்.

அதற்கமைய, மேற்படி பிரச்சினைக்கு பொறியியலாளர் ஆனந்ததேவ சிங்க மற்றும் இளம் பொறியியலாளர்கள் குழு தற்காலிகத் தீர்வை அறிமுகப் படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விலங்குகளை விரட்டும் வகையில் ஒரு தானியங்கி சூரிய சக்தியில் இயங்கும் மின்னணு சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சாதனம் சமீபத்தில் புளத்கொஹுபிட்டிய, வாகொல்ல பகுதியில் சோதனை செய்யப்பட்டது.

# பார்வை குறைந்தோருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கல்

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 100ஆவது ஆண்டு ஜனன தினம் 2025ஆம் ஆண்டில் இடம்பெறுவதை முன்னிட்டு பூர்வாங்க நிகழ்வாக, பார்வை குறைந்த 100 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று காலை 10.00 மணிக்கு கொழும்பு, புதுச்செட்டித்தெரு சாயி நிலையத்தில் கொழும்பு புறக்கோட்டை 306-பி1 அரிமா சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.



அன்று தத்தாத்ரேயர் தினம் என்பதால், காலை 10.30 மணிக்கு திரிசூல அபிஷேகம், குருஸ்த்தான் புனித வேப்ப மரத்துக்கான பூஜை என்பனவும் தொடர்ந்து பஜனையும் நண்பகல் 12.00 மணிக்கு சீரடி சாயி ஆரத்தியும் இடம்பெறும்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை கைதுசெய்ய சென்றபோது குழப்ப நிலை

**(சிவகுமார் திவியா)**

வவுனியா நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்த நிலையில், அந்தப் பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டதையடுத்து மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நீதிமன்றுக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் குறித்த சம்பவம் நேற்று (10) மதியம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர் அந்த வீதியில் நிற்பதை அவதானித்த வவுனியா பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்தனர். இதன்போது அவர் பொலிஸாருடன் செல்ல மறுத்ததால் அந்தப் பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டது.

இருந்தபோதும், கைதுசெய்யப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். குறித்த நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டபோது அந்தப் பகுதியில் தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்ததுடன், தமது கடமைக்கு இடையூறு விளைவித்தார்கள் எனத் தெரிவித்து மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நபரொருவரை அடித்துக்கொலை செய்த சம்பவம்: தம்பதியினருக்கு டிச. 17வரை விளக்கமறியல்

**(அநுராதபுரம் நிருபர்)**

அநுராதபுரம், இபலோகம, வலவ்வேகம பகுதியில் 37 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரை அடித்து கொலைசெய்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதான தம்பதியினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களான கணவன் மனைவியை கெக்கிராவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இபலோகம, வலவ்வேகம விஜித்தபுர, பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 39, 29 வயதுகளையுடைய கணவன் மனைவி ஆகிய இருவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 08ஆம் திகதியன்று இடம்பெற்ற மதுபான விருந்தோம்பலின்போது ஒரு பிள்ளையின் தந்தையான நபர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபரை கைது செய்வதற்காக இபலோகம பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

**11. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திணைக்களங்களில் உயர் முகாமைத்துவத்துக்கான அதிகாரிகளை நியமித்தல்**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் நியமனங்கள் மற்றும் இணைப்பு செய்தல்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது வெற்றிடம் நிலவும் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவியில் சேவையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி எம்.கே.பிரதீப் குமாரவை நியமித்தல்.

தற்போது வெற்றிடம் நிலவும் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு குறித்த திணைக்களத்தில் பணிப்பாளராக சேவையாற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் 1ஆம் தர அலுவலர் பி.எம்.கே.ஹெட்டியாரச்சியை முழுநேர பதில் கடமைக்காக நியமித்தல்.

தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் சேவையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி திருமதி எஸ்.எச்.டி.களுத்தந்திரியை வேறு பொருத்தமான பதவிக்கு நியமிக்கும் வகையில் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு இணைப்பு செய்வதற்கும் அதற்கமைய வெற்றிடமாகும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவிக்கு வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவியில் சேவையாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அலுவலர் விமல் எஸ்.கே.லியனகமவை நியமித்தல்.

தற்போது மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றும் உள்நாட்டு இறைவரி சேவையின் விசேட தர அலுவலர் யூ.டி.என்.ஜயவீரவை மீண்டும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு இணைப்பு செய்வதற்கும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளராக சேவையாற்றும் இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையின் விசேட தர அலுவலர் யூ.எல்.உதயகுமார பெரேராவை மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் நியமித்தல்.

**12. பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் பங்களா வீடுகள், விசும்பாய மற்றும் பல்வேறு பிரதேசங்களில் உள்ள ஜனாதிபதி மாளிகைகளை பாவிப்பதற்காக பொருத்தமான முறைமையை அறிமுகம் செய்தல்**

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் 50 அரச சுற்றுலா மாளிகை மனைகள் கொழும்பு 07 மற்றும் கொழும்பு 05 ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ளன. முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு மேற்குறித்த மாளிகை மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஜனாதிபதி செயலகத்தின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் கொழும்பு, கண்டி, நுவரெலிய, மஹியங்கனை, அநுராதபுரம், கதிர்காமம், யாழ்ப்பாணம், எம்பிலிப்பிட்டிய மற்றும் பெருந்தோட்டப் பிரதேசங்களிலுள்ள ஜனாதிபதி மாளிகைகள் தவிர ஏனைய ஜனாதிபதி மாளிகைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதில்லை. அதற்கு மேலதிகமாக பல அரச தலைவர்களின் உத்தியோகபூர்வ விடுதிகளாகப் பயன்படுத்தப்பட்ட கொழும்பு 02 இல் அமைந்துள்ள விசும்பாய தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாக அதிகாரத்தின் கீழுள்ளது. அத்துடன் பிரதமர் அலவலகத்தின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் நுவரெலியாவில் பிரதமருக்கான உத்தியோகபூர்வ விடுதி உள்ளது. மேற்குறித்த அரச சொத்துக்களின் பராமரிப்புக்காக பெருமளவு நிதி செலவிடப்படுகின்ற போதிலும், குறித்த சொத்துக்கள் குறைபயன்பாட்டில் காணப்படுகின்றன. எனவே மேற்குறித்த வளாகங்கள் மற்றும் வீடுகளை பொருளாதார ரீதியில் உற்பத்தித்திறனாக பயன்படுத்தக்கூடிய வகையில் பொருத்தமான முறைமையை முன்மொழிவதற்கான அதிகாரிகள் குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**13. பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்துக்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறுதல்**

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்படும் நீடித்த நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்துக்கு இணையாக, இலங்கையின் நீடிக்கப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு நிதியளிப்பதற்காக இலங்கை அரசால் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கொள்கை அடிப்படையிலான கடன் திட்டத்தின் கீழ் 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு குறித்த நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தாலும் குறித்த கடனைப் பெறுவதற்கும் இலங்கையில் அமுல்படுத்தப்படும் குறித்த நிதியத்தின் வேலைத்திட்ட வரைகூறுகளுக்கமைய காணப்படுகின்றதெனவும்

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, மேற்குறித்த கடன் தொகையைப் பெறுவதற்காக சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்துடன் கடன் உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. வங்கிகளால் பராட்டே சட்டம் அமுல்படுத்தப்படுதலை கைவிடும் காலத்தை நீடித்தல்**

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் இலங்கை முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடிகள், சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சி பிரிவுக்கு கடுமையான தாக்கம் ஏற்பட்டுள்ளதுடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் வங்கிகளிலிருந்து பெற்ற கடன்களை தீர்க்கும் போது நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாக தெரியவருகிறது. அந்த நிலையில் கடனை செலுத்த முடியாமை காரணமாக கணிசமானளவு வர்த்தகர்களின் ஆதனங்கள் வங்கிகளால் உரித்து பெறப்பட்டு ஏலவிற்பனை செய்யும் சூழல் உருவாகியிருப்பதன் காரணமாக 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தம் செய்து அதன்மூலம் ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல் 2024.12.15 திகதி வரை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. பராட்டே சட்ட கைவிடுதலை தொடர்ந்தும் நீடிக்குமாறு சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சி பிரிவுடன் தொடர்புடைய சங்கங்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. ஆதனங்களை ஏலவிற்பனை செய்வதற்கு இடமளிப்பதற்கு அவ்வாறு கடன்களை மீளச் செலுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்வதன் மூலம் இருதரப்புக்கும் நியாயமான தீர்வு கிடைப்பதற்குத் தேவையான சூழமைவை உருவாக்குதல் மிகவும் பொருத்தமானது என அரசால் அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025.03.31 திகதி வரை பராட்டே சட்ட அமுலாக்க கைவிடுதலை நீடிப்பதற்கும் இலங்கை மத்திய வங்கியால் அரச மற்றும் தனியார் வங்கி மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரினதும் வினைத்திறனான பங்களிப்பின்மூலம் குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பன்முக பொறிமுறையை உருவாக்குவதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. இரட்டை வரி விதித்தலை தவிர்த்தல் மற்றும் வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்துதலை தடுப்பதற்காக இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை எண்ணக்கருப் பத்திரம்**

வருமானத்தின் அடிப்படையிலான வரி தொடர்பில் இரட்டை வரி விதித்தலை தவிர்த்தல் மற்றும் வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்துதலை தடுப்பதற்காக இலங்கை அரசு மற்றும் இந்திய அரசுக்கிடையிலான உடன்படிக்கைக்கு 2013 ஆண்டில் எட்டப்பட்டுள்ளது. இலங்கை மற்றும் இந்தியா Inclusive Framework of the Base Erosion and Profit Shifting (BEPS) Project இன் உறுப்பினர் என்பதனால், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான 20 அமைப்புகள் அணியின் (Group of 20 Organization for Economic Cooperation and Development) செயற்பாட்டு திட்டத்தின் ஆகக்குறைந்த தராதரங்களை அமுல்படுத்துவதற்கான கடப்பாடு நிலவுகிறது. அதற்கமைய, 2013 ஆண்டில் கையொப்பமிடப்பட்டுள்ள இரட்டை வரி விதித்தலை தவிர்த்தல் மற்றும் வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்துதலை தடுப்பதற்கான உடன்படிக்கையை திருத்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்குத் தேவையான திருத்தங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள திருத்த புரட்டக்கோலுக்கு (விருப்புரிமை ஆவணம்) வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் உடன்பாடு மற்றும் சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, திருத்தம் செய்யப்பட்ட புரட்டக்கோலில் கையொப்பமிடுவதற்கும் 2017 ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75 (1) பிரிவுக்கு அமைய கையொப்பமிடப்பட்ட புரட்டக்கோலை அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. 55,000 மெற்றிக் தொன் மியூரியேற் ஒப் பொட்டாஸ் உரம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் கொடையாக இலங்கைக்கு வழங்கப்படுதல்**

55,000 மெற்றிக் தொன் மியூரியேற் ஒப் பொட்டாஸ் உரத்தை உலக உணவுத் திட்டத்தின் கீழ் கொடையாக இலங்கைக்கு பெறுவதற்கு 2024.05.06 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. விடயத்துடன் தொடர்புடைய இருதரப்பு உடன்படிக்கை உலக உணவுத் திட்டம், Uralchem – Uralkali Group கம்பனி மற்றும் இலங்கை அரசின் சார்பில் ஸ்டேட் பெர்டிலைசர் கம்பனி லிமிட்டட் ஆகியவற்றால் 2024.09.20 திகதி கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்குறித்த உரக் கப்பல் 2024.12.10 ஆம் திகதி கொழும்புக்கு வர ஏற்பாடாகியிருந்தது. இதற்கிணங்க உரத்தை இலங்கையிடம் ஒப்படைக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வை 2024.12.12 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாய, கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த தகவல்களை கருத்திலெடுத்து, குறித்த உரத்தின் 50வீத உரத்தை நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கும் 50வீத உரத்தை தென்னைப் பயிர்ச்செய்கைக்கும் பாவிப்பதற்காக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

# இலங்கை கிரிக்கெட்டின் பரிணாமம்

## 6 அணிகள் மோதும் லங்கா ரி10 சுப்பர் லீக் தொடர் இன்று பல்லேகலையில் ஆரம்பம்






இன்றைய போட்டிகள்

| Group A | Group B |
|---|---|
| JAFFNA TITANS | COLOMBO JAGUARS |
| HAMBANTOTA BANGLA TIGERS | KANDY BOLTS |
| NUWARA ELIYA KINGS | GALLE MARVELS |

MATCH SCHEDULE

| DATE | TIME - LOCAL | MATCH NUMBER | HOME TEAM | AWAY TEAM |
|---|---|---|---|---|
| 11 DECEMBER 2024 | 1445 | OPENING CEREMONY | | |
| | 1600 | MATCH 1 | JAFFNA TITANS | HAMBANTOTA BANGLA TIGERS |
| | 1815 | MATCH 2 | NUWARA ELIYA KINGS | COLOMBO JAGUARS |
| | 2030 | MATCH 3 | KANDY BOLTS | GALLE MARVELS |
| 12 DECEMBER 2024 | 1600 | MATCH 4 | KANDY BOLTS | NUWARA ELIYA KINGS |
| | 1815 | MATCH 5 | GALLE MARVELS | HAMBANTOTA BANGLA TIGERS |
| | 2030 | MATCH 6 | JAFFNA TITANS | COLOMBO JAGUARS |
| 13 DECEMBER 2024 | 1600 | MATCH 7 | NUWARA ELIYA KINGS | GALLE MARVELS |
| | 1815 | MATCH 8 | KANDY BOLTS | JAFFNA TITANS |
| | 2030 | MATCH 9 | COLOMBO JAGUARS | HAMBANTOTA BANGLA TIGERS |
| 14 DECEMBER 2024 | 1600 | MATCH 10 | COLOMBO JAGUARS | KANDY BOLTS |
| | 1815 | MATCH 11 | GALLE MARVELS | JAFFNA TITANS |
| | 2030 | MATCH 12 | HAMBANTOTA BANGLA TIGERS | NUWARA ELIYA KINGS |
| 15 DECEMBER 2024 | 1600 | MATCH 13 | HAMBANTOTA BANGLA TIGERS | KANDY BOLTS |
| | 1815 | MATCH 14 | COLOMBO JAGUARS | GALLE MARVELS |
| | 2030 | MATCH 15 | JAFFNA TITANS | NUWARA ELIYA KINGS |
| 16 DECEMBER 2024 | 1600 | MATCH 16 | NUWARA ELIYA KINGS | GALLE MARVELS |
| | 1815 | MATCH 17 | HAMBANTOTA BANGLA TIGERS | COLOMBO JAGUARS |
| | 2030 | MATCH 18 | JAFFNA TITANS | KANDY BOLTS |
| 17 DECEMBER 2024 | 1600 | MATCH 19 | COLOMBO JAGUARS | JAFFNA TITANS |
| | 1815 | MATCH 20 | KANDY BOLTS | NUWARA ELIYA KINGS |
| | 2030 | MATCH 21 | GALLE MARVELS | HAMBANTOTA BANGLA TIGERS |
| 18 DECEMBER 2024 | 1600 | QUALIFIER 1 | TEAM 1 | TEAM 2 |
| | 1815 | ELIMINATOR | TEAM 3 | TEAM 4 |
| | 2030 | QUALIFIER 2 | RUNNER UP OF QUALIFIER 1 | WINNER OF ELIMINATOR |
| 19 DECEMBER 2024 | 1730 | FINAL | WINNER OF QUALIFIER 1 | WINNER OF QUALIFIER 2 |
| | 1945 | CLOSING CEREMONY | | |

தொடரின் போட்டி அட்டவணை

**அகீல் சிஹாப்**

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் முதல் முறையாக இலங்கையில் நடைபெறவுள்ள லங்கா ரி10 சுப்பர் லீக் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

ஆறு அணிகள் பங்கேற்கும் குறித்த தொடர் இன்று (11) முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை வரை தொடர்ச்சியாக 9 நாட்கள் கண்டி, பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதன்முறையாக நடைபெறவுள்ள இந்த ரி10 தொடரில் இலங்கையின் முன்னணி வீரர்கள் மற்றும் சர்வதேசத்தின் முன்னணி வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். தொடரில் கொழும்பு ஜாகுவர்ஸ், கோல் மார்வல்ஸ், ஹம்பாந்தோட்டை பங்ளா டைகர்ஸ், ஜப்னா டைட்டன்ஸ், கண்டி போல்ட்ஸ் மற்றும் நுவரெலியா கிங்ஸ் ஆகிய ஆறு அணிகள் மோதவுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சிம்பாப்வேயில் குறித்த ரி10 தொடர் முன்னதாக நடைபெற்றிருந்தாலும் தற்போது இலங்கையில் முதல் முறையாக அணிக்கு 10 ஓவர்கள் கொண்ட இந்த ரி10 லீக் தொடர் நடைபெறவுள்ளது. இது இலங்கை ரசிகர்களுக்குப் புதிய அனுபவமாக அமையுமென்பதில் சந்தேகமில்லை.

இந்தத் தொடரில் அலெக்ஸ் ஹேல்ஸ், ஷகீப் அல்-ஹஸன், அண்ட்ரே பிளெச்சர், இப்திகார் அஹமட், ஹஸரதுல்லா ஷஷாய், கரிம் ஜனத், முஹமட் ஆமிர், டேவிட் வீஸி, இமாட் வஸீம், கைல் மேயர் போன்ற நட்சத்திர வெளிநாட்டு வீரர்கள் குறித்த தொடரில் பங்கேற்கின்றனர்.

இன்று பிற்பகல் 2.45 மணிக்கு தொடரின் ஆரம்ப விழா கோலாகலமாக நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் 3 போட்டிகள் நடைபெறவுள்ளன. பி.ப. 4.00 மணிக்கு முதல் போட்டியும் மாலை 6.15 மணிக்கு இரண்டாவது போட்டியும் இரவு 8.30 மணிக்கு மூன்றாவது போட்டியும் நடைபெறவுள்ளன. இந்த நேர அடிப்படையிலேயே தினமும் 3 போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒரு அணிக்கு மொத்தமாக 7 போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் ப்ளேஓவ் சுற்றுக்கு முன்னேறும். இதில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் குவாலிபையர்-1 போட்டிக்குத் தகுதிபெற்று அதில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும். குறிப்பாக சொல்லப்போனால் ஐ.பி.எல். விதத்திலேயே போட்டிகள் நடைபெறவுள்ளன.

தொடரில் 21 லீக் போட்டிகளும் ப்ளேஓவ் சுற்றில் 3 போட்டிகள் மற்றும் இறுதிப்போட்டி என மொத்தமாக 25 போட்டிகள் நடைபெறவுள்ளன. இன்று முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வரை லீக் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதனையடுத்து 18ஆம் திகதி ப்ளேஓவ் சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இறுதியாக 19ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு தொடரின் முதல் சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டி நடைபெறும்.

T10 GLOBAL
LANKA T10 SUPER LEAGUE
COMPLETE SQUADS
SEASON 1

| Colombo Jaguars | Galle Marvels | Hambantota Bangla Tigers | Jaffna Titans | Kandy Bolts | Nuwara Eliya Kings |
|---|---|---|---|---|---|
| Angelo Mathews | Maheesh Theekshana | Dasun Shanaka | Wanindu Hasaranga | Thisara Perera | Avishka Fernando |
| Azam Khan | Shakib Al Hasan | Iftikhar Ahmed | Tom Kohler-Cadmore | Imad Wasim | Saurabh Tiwary |
| Kamindu Mendis | Binura Fernando | Dushmantha Chameera | Charith Asalanka | Pathum Nissanka | Dushan Hemantha |
| Matheesha Pathirana | Bhanuka Rajapaksa | Kusal Perera | Kusal Mendis | Dinesh Chandimal | Kasun Rajitha |
| Tymal Mills | Luke Wood | Richard Gleeson | Mohammad Amir | Saim Ayub | Benny Howell |
| Asif Ali | Alex Hales | Hazratullah Zazai | Johnson Charles | George Munsey | Kyle Mayers |
| Angelo Perera | Jeffrey Vandersay | Tharindu Ratnayake | Dunith Wellalage | Chaturanga de Silva | Lahiru Madushanka |
| Akila Dhananjaya | Chamindu Wickramasinghe | Isuru Udana | Nuwan Thushara | Milinda Siriwardana | Danushka Gunathilaka |
| Ali Khan | Zahoor Khan | Mohammad Shahzad | David Wiese | Shahnawaz Dahani | Aftab Alam |
| Najibullah Zadran | Andre Fletcher | Karim Janat | Dwaine Pretorius | Amir Hamza Hotak | Oshane Thomas |
| Isitha Wijesundara | Sandun Weerakkody | Dhananjaya Lakshan | Pramod Madushan | Shehan Jayasuria | Nimsara Atharagalla |
| Ramesh Mendis | Prabath Jayasuria | Nishan Peiris | Pavan Rathnayake | Chamika Gunasekara | Yashoda Lanka |
| Aamer Jamal | Kesrick Williams | Soumya Sarkar | George Garton | Chandrapaul Hemraj | Zubaid Akbari |
| Ranuda Somarathne | Dumindu Sewmina | Shevon Daniel | Traveen Mathew | Danal Hemananda | Vishen Halambage |
| Jewel Andrew | Tadiwanashe Marumani | Brian Bennett | Kevin Wickham | Arinesto Vezha | Rivaldo Clarke |
| Asitha Fernando | -- | Sahan Arachchige | -- | Seekkuge Prasanna | Chamika Karunaratne |
| Dilshan Madushanka | -- | Vijayakanth Viyaskanth | -- | -- | -- |
| Garuka Sanketh | Sadisha Rajapaksa | Chamath Gomez | | -- | Pulindu Perera |

ஒவ்வொரு அணியிலும் இடம்பிடித்துள்ள வீரர்கள்

# 2024 பிறீமா ஸ்ரீ லங்கா யூத் லீக் சம்பியனான கொழும்பு சவுத் அணி

15 வயதுக்குட்பட்ட 2024 Sri Lanka Youth League (SLYL) கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கண்டி அணியை வீழ்த்திய கொழும்பு சவுத் (கொழும்பு தெற்கு அணி) சம்பியன் பட்டம் வென்றது.

நம்பிக்கைக்குரிய இளம் கிரிக்கெட் வீரர்களை ஆரம்ப நிலையிலேயே அடையாளம் காணும் நோக்குடனான இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தேசிய பாதை திட்டத்தின் கீழ் இந்தத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு பிறீமா நிறுவனம் முழு அனுசரணை வழங்கியிருந்தது.






இதன் இறுதிப் போட்டி 06ஆம் திகதி தேர்ஸ்டன் கல்லூரி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு தெற்கு அணி 49 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 214 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி, 25.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 65 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதற்கமைய Prima U15 SLYL 2024 கிரிக்கெட் தொடரின் சம்பியனாக கொழும்பு தெற்கு அணி முடிசூடிக்கொண்டது.

இறுதிப் போட்டியில் 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்திய கொழும்பு தெற்கு அணியின் சனிது கங்கனம்கே ஆட்டநாயகனாகத் தெரிவானதோடு, போட்டித் தொடரின் நாயகனாக கொழும்பு தெற்கு அணியின் துஷேன் உடவெல தெரிவானார். தம்புள்ளை அணியின் யுமல் எகொடகே போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக தெரிவானார்.

மாவட்ட ரீதியிலான போட்டிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இளம் துடுப்பாட்ட வீரர்களை உள்ளடக்கிய 50 ஓவர்கள் கொண்ட Prima U15 SLYL 2024 கிரிக்கெட் போட்டித் தொடரானது 2024 நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பமானது. இந்த வீரர்கள் கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, தம்புள்ளை, காலி, கண்டி ஆகிய ஐந்து அணிகளாகப் போட்டியிட்டனர்.

# மைதானத்தில் முறுகிய சிராஜ் – ஹெட் ஆகியோருக்கு அபராதம்

ரோஹிட் சர்மா தலைமையிலான சுற்றுலா இந்திய – பெட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அடிலெய்டில் நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது வாக்குவாதத்தில் ஈடுபட்ட இந்திய வேகப்பந்துவீச்சாளரான மொஹமட் சிராஜ் மற்றும் அவுஸ்திரேலிய துடுப்பாட்டவீரர் ட்ராவிஸ் ஹெட் ஆகியோருக்கு ஐ.சி.சியால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய – அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான 5 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. இந்தப் போட்டியில் ஆஸி. அணியின் முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் 82ஆவது ஓவரில் ட்ராவிஸ் ஹெட்டை மொஹமட் சிராஜ் தனது பந்துவீச்சில் ஆட்டமிழக்கச் செய்ததோடு, ஹெட் ஆட்டமிழந்த பின்னர் சிராஜ் ஹெட்டை அவுஸ்திரேலிய வீரர்களின் உடை மாற்றும் அறைக்குச் செல்லும் வகையில் சைகை காட்டியிருந்தார்.




ஹெட் – சிராஜ் இடையில் நடைபெற்று முடிந்த இந்த நிகழ்வின் காரணமாகவே இரண்டு வீரர்களுக்கும் அபராதம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இரண்டு வீரர்களுக்கும் நன்னடத்தை விதிமீறல் புள்ளிகள் தலா ஒன்று வீதம் வழங்கப்பட்டிருப்பதோடு, இதற்கு மேலதிகமாக மொஹமட் சிராஜுக்கு அவரது போட்டிக்கட்டணத்தில் 20 சதவீதம் மேலதிக அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இரண்டு வீரர்களும் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை ஒப்புக்கொண்டிருப்பதன் காரணமாக அவர்கள் மீது மேலதிக விசாரணைகள் நடத்தப்படாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊழல் தடுப்புச் சட்டத்தை மீறிய உதவி பயிற்றுவிப்பாளருக்கு ஆறு ஆண்டுகள் தடை

**அபுதாபில் கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற ரி10 லீக் தொடரில் உதவிப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றிய சன்னி தில்லான் எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரியத்தின் ஊழல் தடுப்புச் சட்டத்தை மீறியதாக ஊழல் எதிர்ப்பு ஆணையம் கண்டறிந்ததையடுத்து, அவர் அனைத்து கிரிக்கெட்டிலுமிருந்து ஆறு ஆண்டுகளுக்கு தடை செய்யப்பட்டுள்ளார்.**

**ஊழல் சட்டத்தை மீறியதற்காக கடந்த ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்ட 8 பேரில் அபுதாபி ரி10 தொடரில் பங்கேற்ற அணியின் முன்னாள் உதவிப் பயிற்சியாளர்களில் இவரும் ஒருவராவார். எழுத்துப்பூர்வ மற்றும் வாய்மொழி வாதத்தின் முழு விசாரணை மற்றும் விளக்கக்காட்சியைத் தொடர்ந்து, குறித்த ஆணைக்குழு மூன்று பிரிவுகளில் இவர் குற்றவாளி என அறிவித்தது.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7